விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 24 சனிக்கிழமை (09.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 233

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் மன்னாரில் கூடினர் உறவுகள்

## 224 பேர் சாட்சியமளிக்க சென்றனர்

(கொழும்பு) காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் 6 ஆவது அமர்வு விசாரணைகளில் மன்னார் மாவட்டத்தைச் சோர்ந்த 224 பேர் சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யு.குணதாஸ தெரிவித்தார்.


நேற்றுக் காலை மன்னார்மாந்தை மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் இந்த அமர்வு ஆரம்பமானது. இன்றும் இந்த அமர்வு அங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நாள்மன்னார்பிரதேச செயலகத்திலும் நான்காவது நாள் மடு பிரதேச செயலகத்திலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

முதல் நாள் நடைபெற்ற விசாரணைகளில் அதிகமானோர் தங்களின் பிள்ளைகள் விடுதலைப் புலிகள் பலவந்தமாக ஆட்சேர்ப்பதற்காகப் பிடித்துச்சென்றதன் பின்னர் காணாமல் போயிருப்பதாகவும், பலர் தங்களுடைய பிள்ளைகள் அங்கிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வந்தபின்னர் காணாமல் போயிருப்பதாகவும் தமது சாட்சியத்தில் தெரிவித்தனர்.

இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல

19 ஆம் பக்கம் பார்க்க....



## கொள்கையில்லாத ஐ.நா.சபை அமெரிக்காவின் கைப்பாவை

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு சரியான கொள்கைகள் இல்லை எனவும் அது அமெரிக்காவின்கைப்பாவை என்பதால், அதனை உலகத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும்மேல்மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதன் மூலம் அமெரிக்கா மற்றும் ஐ.நா அமைப்பின் இரட்டை நிலைப்பாடும் அவற்றின் மனித உரிமை தொடர்பான போலியான நடவடிக்கைகளும் நிர்வாணப்படுத்தப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் மீது ஷெல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து தேட அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே.சீசன், அமெரிக்காவின போர்க் குற்றங்கள் தொடரபில் விசாரணை நடத்தும் தூதுவர் ஸ்டீவன ரெப் மற்றும் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆகியோரிடம் கேட்கும் இந்த நியாய, தர்ம மற்ற இந்த இரட்டை

19 ஆம் பக்கம் பார்க்க....




கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனம் மீதான தாக்குதல்களைக் கண்டித்த மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக கொள்ளுப்பிட்டி – காலி வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

## கே.பிக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்

(சென்னை)


கே.பி. என்ற குமரன் பத்மநாதனிடம் இந்தியாவில் விசாரணை நடத்தக் கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

முன்னாள் பொலிஸ் அதிகாரி மோகன்ராஜ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில்,

ராஜிவ் காந்தி கொலை வழக்கில், கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான வழக்கை விசாரித்து நீதிமன்றம் தண்டனை வழங்கி விட்டது. இந்த வழக்கில் உள்நாடு மற்றும் வெளிநாட்டை சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு உள்ளது.

அப்படிப்பட்ட நபர்களை கண்காணிக்கவும், கைது செய்யவும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிகையாக தாக்கல் செய்து விசாரணைக்கு

20 ஆம் பக்கம் பார்க்க....



## விமலின் கோரிக்கையை ஏற்கமறுத்தது அரசு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் 12 அம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என அரசாங்க ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட யோசனைகளை ஏற்றுக் கொள்வதும் அது குறித்து பேச்சுவார்த்தை நடாத்த இணங்குவதும் இரு வேறுபட்ட விடயங்களாகும்.

உத்தியோகபூர்வமாக 12 அம்ச கோரிக்கைகளை அமைச்சர் விமல் வீரவன்ச சமர்ப்பிக்கவில்லை. பேச்சுவார்த்தை நடத்த

20 ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாட்டு இராணுவத்துக்கு இலங்கையில் விசேட பயற்சி

(கொழும்பு)

வெளிநாடுகளைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரிகளுக்கு இலங்கையில் பயிற்சியளிக்கும் செயற்திட்டமொன்று இந்த வருடம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் வெற்றியை தனது இராணுவத்தின் கடினமான பயிற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாக இலங்கை பிரசாரப்படுத்தி வருகின்றது. இது உலக நாடுகள் மத்தியில் இராணுவத்தின் மீதான மதிப்பை அதிகரிக்கவைத்துள்ளது.

மறுபுறத்தில் இலங்கை இராணுவத்தினருக்கு வெளிநாடுகளில் பயிற்சி அளிப்பதில் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இந்தியாவில் பயிற்சிக்கு அனுப்பவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைகளைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு, இலங்கை இராணுவ பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிவழங்கும்

19 ஆம் பக்கம் பார்க்க....

## மேர்வினை கவனித்த ஊடகங்கள் குட்டைப்பாவாடையை கவனிக்கவில்லை

### யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய வளாகத்திற்குள் சப்பாத்துடன் செல்லக்கூடாது என அமைச்சர் மேர்வின் சில்வா உண்மையில் அறிந்திருக்கவில்லை என றும், ஆலயத்திற்குள் மட்டுமே சப்பாததுடன்செல்லக்கூடாது என அவர் அறிந்திருந்தார்எனவும் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார்.

இருப்பினும், நல்லூர் ஆலயத் ... செல்பவர்களைக் கவனிக்காமல், மேர்வின் சில்வா ஆலய வளாகத்தில் சப்பாத்துக்களுடன் சென்றிருந்ததைக கவனித்து செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நல்லூருக்கு விஜயம் செய்த அமைச்சர் மேர்வின் சில்வா, சப்பாத்துடன் ஆலய வாயில் வரையில் சென்று சுவாமி தரிசனம் செய்தமை தொடர்பில் பத்திரிகைகளில் விமர்சிக கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கேட்ட போதே அவர்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## முருகுப்பிள்ளை பிள்ளையினார்

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை பிள்ளையினார் கடந்த 04.08.2014 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மா வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வினாசித்தம்பி, கோகிலான் மற்றும் அன்னபாக்கியம் ஆகியோரின் செல்லச் சகோதரனும், காலஞ்சென்ற வினாசித்தம்பி, பாக்கியம், முத்துவேல், முருகேசு, மார்க்கண்டு, சின்னக்கிளி, செல்லையா, செல்லத்தம்பி, கந்தையா மற்றும் பூபாலசந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தவமலர், லலிதாதேவி, பத்மினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருமைலிங்கம், நித்தியானந்தம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், நளாயினி, அருண்குமார், கலையரசி, பதுமநிதி, அனுசியா, காலஞ்சென்ற விஷ்ணு, ரேவதி மற்றும் தாட்ஷாயினி, ஜெனார்த்தனி, திருப்பதி, தாரிணி, ரமணன், கோபிநாத், நித்தியா, சுரேஷ், ரமேஸ், அகல்யா, தினேஸ், தங்கவேலாயுதம், காவேரி, பொன்ராசா, வெள்ளிமயில், வைகுந்தம், விஜயன், பிரகாஸ்குமார், மலர்விழி, திவாகரன், கௌதமி, ஸ்ரீவித்தியா, சிந்துஜா, சாளினி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரேணுகா, அச்சுதன், சுகிர்தன், வேணுகாயினி, துவாரகாயினி, ரவேன், அங்கிஷா, ஆதினி, ஆதவன், ஞானகலை, இளவரசி, சாம்பகி, பிரகஸ்பதி, நிவேதா, அருண்ராஜ், அனுஸ்ராஜ், சின்னத்தம்பி, ஹரீன், கன்சிகா, அங்குஷன், விஷ்ணுஜன், நிவாசினி, வினேசியா, விகாசினி, திவாசினி, நிலக்ஷி, தஸ்விகன், றொசானா, அதீஸ், நிகானா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் றெசினா, அயானா, அக்றியா, அஜய், அஜிதா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பருத்தித்துறை, ஐயனார் கலட்டி.
0774749918

(7253)

# மரண அறிவித்தல்



## கதிரேசு மகேஸ்வரன்

**(வர்த்தகர், மகேஸ்வரன் ஸ்ரோர்ஸ், நயினாதீவு 6ஆம் வட்டாரம்)**

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரேசு மகேஸ்வரன் (07.08.2014) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு சௌந்தரம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும் சிவானந்தி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் (யா/நயினாதீவு மகா வித்தியாலயம்) மற்றும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், மகாலிங்கம், சற்குருமணி மற்றும் சத்தியேஸ்வரி (முறைசாராக் கல்வி ஆசிரியை- தையல் பயிற்சி, யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்) ஆகியோரின் ஆருயிர் சகோதரனும் கலாநிதி (அவுஸ்திரேலியா), மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌசல்யாவின் (அவுஸ்திரேலியா) பெரியப்பாவும் றஞ்ஜித்குமார் (பிரான்ஸ்), றஞ்ஜினி, றோகினி, தர்மினி, பிரேமினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுகந்திமலர் (பிரான்ஸ்), சுரேஸ், சசிகரன், தருமராசா, சுதாகர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் தர்ஷனா, லிதுஷனா, விதுஷனா, நர்த்தனா, சாயிராதன், பிவிஷ்ணன், ஹரிஸ்நாத், அபிஸ்நாத், தர்ஷிபா, திருஷனா, பிரவீன், சாருஷா, பிரதீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின் அவரது பூதவுடல் சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் : குடும்பத்தினர்
தொலைபேசி இல.
0213001107, 0776094632, 0765429764

எட்டாம் வட்டாரம்,
நயினாதீவு.

([illegible]-8140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் கோரிக்கையினைத்தான் ஜனாதிபதி மஹிந்த நிறைவேற்றினார்

## லலித் வீரதுங்க தெரிவிப்பு

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஜனாதிபதியிடம் அனைவரும் கேட்டனர், இந்த கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து எங்களை இந்த நாட்டில் சமாதானமாகவும் சந்தோசமாகவும் வாழ வழிசெய்யுங்கள் என்று: அந்தக் கோரிக்கையைத்தான் ஜனாதிபதி நிறைவேற்றினார். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க.


'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற மும்மொழியிலான முஸ்லிம் பௌத்த இன ஐக்கியம் சம்பந்தமான கை நூல் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் சபாநாயகர் எம்.எச். முஹம்மத், சப்ரகமுவ பல்கழைக்கழக வேந்தர் பேராசிரியர் கும்புருகமுவே வஜிர நாயக்க தேரர் ஆகியோரது இணைத்தலைமையில், நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த லலித் வீரதுங்க, மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த நாட்டில் நடைபெற்ற 30 வருடகால யுத்தத்தில் நாம் அன்றாடம் அமைதியினமை, மரண ஓலங்கள், குண்டுவெடிப்புக்கள் போன்ற பல்வேறு துண்பங்களுடன் வாழ்ந்து வந்தோம். அந்த காலப்பகுதியில் நாம் நாளாந்தம் ஒவ்வொரு நிமிடத்திலும் பயத்துடனேயே வாழ்ந்து வந்தோம்.

அந்த யுத்தம் ஓர் இனத்துக்கோ, மதத்திற்கோ என்று இல்லாமல் இந்த நாட்டில் வாழும் அனைவரையும் பாதித்தது. இன்று யுத்தம் முடிவடைந்துள்ளது. தற்பொழுது இந்த அழகிய நாட்டின் சமாதானக் காற்றை நாம் அனுபவிக்கின்றோம். தற்பொழுது இந்த நாட்டில் சகலரும் எவ்வித பயமுமின்றி நாலா பாகத்திற்கும் சென்றுவருகிறோம்.

உலகில் உள்ள பல்வேறு நாடுகள், இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கவே முயற்சித்தன. இதற்காக எவ்வளவோ அழுத்தத்தை ஜனாதிபதிக்கு கொடுத்தனர். அதையெல்லாம் முகம் கொடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். ஆகவேதான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தபின் இந்த நாட்டில் இரு இனங்கள் மட்டுமே உள்ளன. ஒன்று நாட்டுக்கு விசுவாசமானவர்கள், மற்றையவர்கள் விசுவசமற்றவர்கள் என்று ஜனாதிபதி சொல்லியிருந்தார். எனது பாடசாலைப் பருவத்தில் என்னுடன் தமிழ், முஸ்லிம் கிறிஸ்தவ பாடசாலை நண்பர்கள் இருந்துவந்தனர். அவர்களுடன் மிக நெருக்கமாகவும் அவர்களது கலை கலாசாரத்துக்கு மதிப்பளித்தும் வாழ்ந்து வந்தேன். ஆனால் அன்று எனக்கு தமிழ் பாடத்தை கற்கக் கூடியதாக பாடசாலைக் கல்வி அமைந்திருக்கவில்லை. அந்த வசதி இருந்திருந்தால் இன்று நான் இந்த நிகழ்வில் உங்களோடு தமிழ் மொழியிலும் பேசக் கூடியதாக இருந்திருக்கும்.என ஜனாதிபதியின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (6)



# வெளியுறவுக் கொள்கை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்

நாட்டின் வெளியுறவுக்கொள்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கிராமங்களுக்குச் சென்று நாட்டின் வெளியுறவுக்கொள்கை பற்றி தெளிவுபடுத்தபபடும் என அவர் தெரிவித்தார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு எந்த விதமான கேள்வியையும் எழுப்பவில்லை, யுததம் நிறைவடைந்ததன் பின்னரே கேள்வி எழுப்புகின்றது என அவர் தெரிவித்தார்.

இலங்கை தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள் அர்ப்பணிப்புடன் நாட்டுக்காக சேவையாற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தேவையில்லாமல் வெளிவிவகார அமைச்சின் மீது சேறு பூசி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்துடன் சிறந்த உறவு பேணப்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் பெயரில் பாலஸ்தீனத்தில் வீதியொன்று காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை-பாலஸ்தீனம் தொடர்பில் பின்பற்றி வரும் கொள்கைகளில் மாற்றமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் இலங்கையின் நிலைப்பாடு குறித்து பாலஸ்தீனம் கேள்வி எழுப்பியதில்லை எனவும், எதிர்க்கட்சிகள் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா உள்ளிட்ட உலகின் பல நாடுகளுடனும் சிறந்த உறவு பேணப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (6)

# 36 பாகிஸ்தானியர்களை நாடு கடத்தியது இலங்கை

## ஐ.நா.கவலை


இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜைகள் 36 பேர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவை இவ்விடயம் குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு நாடுகடத்தப்பட்டவர்களில் பல பெண்களும் சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் பிரஜைகளை கைது செய்வதற்கான விசாரணைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களை நாடுகடத்துவதற்கான நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுத்தது. எனினும் இந்நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் பேரவை கவலை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டவர்களை நாடு கடத்துவதற்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் பேரவை மேற்கொள்ள தவறிவிட்டதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் பிரஜைகள் 205 பேர், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் அகதிகள் கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவை குறிப்பிட்டுள்ளது. (6)



கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு முன்பாக நேற்றுக் காலை நண்பகல் ஏற்பட்ட வீதி விபத்தில் வாகனம் குடை சாய்ந்து மூவர் படுகாயமடைந்துள்ளனர். வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளை இந்தப் பாரிய விபத்து ஏற்பட்டது. வீதியோரத்தில் கடைகளில் மக்கள், பாதசாரிகள் நின்றிருந்த வேளை விபத்துக்குள்ளான வாகனம் கடையொன்றுடன் மோதிச் சரிந்தது. கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கும் கந்தசாமி கோவிலுக்குமிடையில் கடந்த ஓரிரண்டு மாதங்களுக்குள் மூன்று பாரிய விபத்துக்கள் இடம்பெற்றதுடன் வாகனங்கள் குடைசாய்ந்து வீதிகளில் சின்னாபின்னப்பட்டமை குறிப்பிடத்தக்கது . (6)

# இராசி பலன்

09.08.2014
(ஆடி 24, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.17 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 1.59 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை

வளவன்

**மேடம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, ஆரோக்கியம் சீராகும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** வரவு வருவதற்கு முன்னே செலவுகள் காத்திருக்கும், .ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, போசன சுகமுண்டு.

**கடகம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, ஆபூர்வ சந்திப்புக்கள் இடம்பெறும்.

**சிம்மம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், உடல் நலம் சீராகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், போட்டிகள் மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபாரத்தை விரிபுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், அந்நியா சந்திப்புக்கள் ஏற்படலாம்.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சிதரும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.


**கும்பம்** சொந்த பந்தங்களுக்காக சில செலவுகள் செய்ய முற்படுவீர்கள், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், சோம்பலை விலக்குவது நல்லது, பிதா சிந்தையுண்டு, அலைச்சல்கள் கூடும்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு - வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய இரதோற்சவ சிறப்புமலர்-09.08.2014


ஆசி வழங்கிய
அந்தணச் சிவாச்சாரியர்கள்



மஹோற்சவ பிரதம குரு
சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள்


கும்பாபிஷேக பிரதம குரு
சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள்


ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

ஆசி வழங்கிய சமயத் தலைவர்கள்


நல்லை ஆதீன முதல்வர்


கலாநிதி ஆறுதிருமுருகன்


சின்மயாமிஷன் சுவாமிகள்

09.08.2014
தேர்த்திருவிழா
பூஜை ஆரம்பம்
*காலை 6.00 மணி*
வசந்த மண்டபப் பூசை
*காலை 8.00 மணி*
அம்பாள் தேரில்
ஆரோகணம் செய்தல்
*காலை 10.00 மணி*

## ஆலய பரிபாலன சபையினரின் வாழ்த்து


போசகர் திரு. க.சிவராஜா


தலைவர் திரு. ம.சசிகாந்


செயலாளர் திரு. மா. கஜேந்த்


இணைச்செயலர் திரு. வி.ஜனார்த்தனன்


பொருளாளர் திரு. ஜெ. பிரேமகாந்தன்


## வானுறையும் தெய்வங்களின் ஆசி


சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள்


சிவஸ்ரீ ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்கள்


ஸ்ரீமான் க. அம்பலவாணர்


ஸ்ரீமான் நா. தாமோதரம்பிள்ளை


ஸ்ரீமான் சி.நல்லையா


திருமதி அருந்ததி சிவப்பிரகாசம்

## ஆலய வரலாறு

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் தென்பால் அமைந்த இலங்கைத் தீவு ஈழம் என்று வழங்கி வந்ததை பட்டினத்துப்பாலை போன்ற பல இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

கடல், குமரிக் கண்டத்தின் பெரும் பகுதியை விழுங்கிய பொழுது எஞ்சிய பகுதிகள் சப்த தீவுகளுடன் மண்டைதீ வும் சேர்ந்து கொள்கிறது. இக்கிராமத்தின் கிழக்குத் திசையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் தனிச் சிறப்பும் வரலாறும் கொண்டதாக விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு ஆவண ரீதியாகப் பேணப்படா மையால் கர்ண பரம்பரைத் தகவல்களையே சேகரித்து தர முற்படுகின்றோம். இவ்வாலயம் அமைந்திருக்கும் இடம் அம்மனுக்கே உரிய வேப்பமரங்கள் சோலையாக நிறைந்திருந்த வேப்பந்திடல் எனும் பகுதியாகும்.

முத்துமாரியம்மன் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தனது பரிவாரங்களுடன் தீர்த்தவாரி எனப்படும் கடற் கரையோரம் சேமகலம், சங்கு, மணியோசை, மேளம் ஆகிய வாத்தியங்களுடன் வந்திறங்கி வேப்பந்திடலில் வெள்ளைச் சேலை அணிந்து தங்கிய தோடு அவ்விடத்தில் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்துள்ளார். பிற்காலத்தில் சின்னத்தம்பி என்பவருக்கும் காட்சி கிடைத்துள்ளது.

இக்காட்சியைக்கண்ணுற்றஅவர் ஊர் மக்களுடன் கலந்து காட்சி கண்ட இடத்திலிருந்து வேப்பமரத்தின் கீழ் சிறு கொட்டிலில் அமைந்திருந்த அம்மன் திருவுருவத்தை வழிபடத் தொடங்கினார்.

காலப்போக்கில் ஆலயம் வளர்ச்சியுற்று தற்போதுள்ள அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் ஆலயமும் அம்மனும் கீர்த்தியடைந்து முழு ஊரில் உள்ளவர்களும் அயலூரில் உள்ளவர்களும் வழிபடத் தொடங்கினார்கள்.அம்மன் கோயில் பக்கத்திலேயே பிள்ளையார், முருகன் போன்ற தெய்வங்களுக்கான ஆலயங்களும் வேறு சிலரால் தோற்றுவிக்கப்பட்டு அம்மன் வீதியுள்ளடங்கியதாக அமைந்துள்ளது.இந்நிலையில் வளர்ச்சி கண்ட இவ்வாலயத்தில் நித்திய கருமங்கள், பூசைகள், வருடாந்த உற்சவங்கள் பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு போன்ற விஷேட திருவிழாக்களும் நடைபெற்று வந்தன.


இவ்வாறு தொடர்ந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையாலும் போராலும் 1991 ஆம் ஆண்டு முழு கிராம மக்களுமே இடம் பெயர்ந்து சென்றனர். அவ்வேளை கோயிலும் சேத முற்றே காணப்பட்டது.

பூசைகள், விழாக்கள் பொங்கல் எதுவும் நடைபெறாது சேதமடைந்து? காணப்பட்டது. இந்நிலையில் பொது மக்களும் உரிமையாளர்களும் ஒன்று கூடி 2003 ஆம் ஆண்டு மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரிய ம்மன் பரிபாலன சபை ஒன்றை அமைத்து புதிய ஆலயம் கட்டும் பணிகளை தொடங்கி நடைபெற்று பூர்த்தியாகியது.

நிறைவு தெரிந்த காலத்து.ஆலய நிர்வாகிகளாக இருந்த பெரியவர்களின் விபரம் திரு.இ. சின்னத்தம்பி, செல்வத்தம்பி, செ.வெற்றி வேல் மற்றும் என்னால் நேரடியாக பார்க்க முடிந்த வெற்றிவேல் கனசபை, கனக சபை அம்பல வாணர் ஆகியோர் இருந்துள்ளமை அறியப்படுகின்றது.

க.பரமானந்தம்
(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்)

## திருவிழா உபயகாரர்களின் வாழ்த்து


திரு. ந. பாதவகுலசிங்கம்


திரு. க. சிவப்பிரகாசம்


செல்வி. க. பாக்கியலஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்களை தொடர்வதற்கு கூட்டமைப்புக்கு அரசு அழைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நியாயமானவை. அவற்றில் 80 வீதமானவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும், கூட்டு அரசாங்கம் என்ற வகையில் பிரச்சினைகள் எழவே செய்தன. அதனை நாம் பேச்சுக்களின் ஊடாக இணக்கத்துக்குள் கொண்டுவந்துள்ளோம்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு முன்வர முடியும் என அரசாங்கம் பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்தது.

நாட்டில் உள்ள அனைத்து மாகாண சபைகளிலும் அதிகாரங்கள் முழுமை பெற்றிருக்கவில்லை. அந்த வகையில், வடமாகாணத்திற்கு கிடைக்கப் பெற்றிருக் கின்ற அதிகாரங்களை செயற்படுத்தி முன்னோக்கிச் செல்வதே சிறந்தது என்றும் சுட்டிக்காட்டியது.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை அமர்வின் போது வெளிவிவகார அமைச்சின் சேவைகள் தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர், ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மேற்கண் டவாறு வெளிப்படுத்தினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இவ் விவாதத்தில் முக்கியமான விடயங் களும் முன்வைக்கப்பட்டன. அதே போன்று சேறு பூசல் கருத்துக்களும் முன் வைக்கப்பட்டன. இது அரசியலுக்கு புதிதல்ல. அநுர குமார திஸாநாயக்க எம்.பி. வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை சுமத்தினார். இதில் உண்மையில்லை. செயலாளர் அரச அதிகாரி. எனவே, அவருக்கு பாராளுமன்றத்தில் பதில்கூறமுடியாது.

செயலாளருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறுவது எனது கடப்பாடாகும். எனது வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதற்காக கிராமம் தோறும் செல்வேன். மேடைகளில் பேசுவேன். எனது கடமை தொடரும்.

மக்களை தெளிவுபடுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.மறைந்த லக்ஷ்மன் கதிர்காமரும் இதனை மேற்கொண்டார். சிங்கள மொழியில் பரீட்சயமில்லாததால் கொழும்பில் மட்டும் பேசினார்.

சில பேச்சாளர்கள் ஆபிரிக்க நாடுகள் தொடர்பில் இச் சபையில் குறைத்து மதிப்பிட்டு அவமானமாக உரையாற்றினார்கள். இது கவலைக்குரிய விடயமாகும்.

மனித உரிமைகள் தொடர்பாக இன்று பேசுபவர்கள் அன்று விடுதலைப்புலிகள் காலத்தில் பேசினார்களா?புலிகளுக்கு எதிராக பிரேரணைகளை கொண்டுவந்தார் களா? யுத்தம் இடம்பெற்ற போது அதனை நிறுத்த பிரிட்டன் உட்பட பல நாடுகள் முயற்சித்தன. ஆனால், ஜனாதிபதி அவற்றை நிராகரித்தார.

இலங்கையில் இனப்பிரச்சினையை வெளிநாட்டு அனுசரணையுடனேயே தீர்க்க முடியும் என 2010 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் தெரிவித்தார். எமக்கெதிராக குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்தாலும் வெளிநாட்டுத் தலையீடுகளை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மண்டியிடவும் மாட்டோம். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள முனைவோம்.

சீனா நட்புறவு நாடு. அதனோடு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்யவுள்ளோம். இந்தியாவுடனும் இவ்வாறான உடன்படிக்கையை செய்துகொள்ள உத்தேசித்துள்ளோம். இம் மாத இறுதியில் ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்கின்றார். இதன் மூலம் நாட்டிற்கு பல நன்மைகள் கிடைக்கும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் குழுவில் எமக்கெதிரான பிரேரணையில் உள்ளூர் விசாரணையை வலியுறுத்தி யுள்ளதோடு சர்வதேச விசாரணை குறித் தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் எதிர்க்கின்றோம். காணாமற் போனோர் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழுவிற்கு உலகம் ஏற்றுக் கொண்ட திறமைவாய்ந்த நிபுணர்கள் ஆலோசனை வழங்க நியமிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணை களை நடத்தமாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை; நடைமுறைப்படுத்தினாலே போதுமாம்

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் சுதந்திரமான நீதி சேவையும் ஆணைக்குழுவினால் உறுதி செய்யப்பட்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டு 17ஆவது திருத்தம் மீண்டும் கொண்டவரப்படின் உள்விவகாரங்களில் வெளிநாட்டு நிபுணர்கள் தலையிட வேண்டிய தேவையிராது என ஐ.தே. கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் பங்குபற்றிய கூட்டம் தாக்கப்பட்டது. ஆனால் அரசாங்கமே வெளிநாட்டு நிபுணர்கள் குழுவொன்றை காணாமற போனோர் பற்றிய ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென நியமித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் குழு ஒழுங்கு செய்த அந்த கூட்டத்தில் அவர், தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெள்நாட்டு இராஜதந்திரிகள் அரசாங்கத்தில் நிபந்தனைகளை மீறியிருப்பின் அவரகள் நாடு கடத்தப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் அதை செய்யாது உறுப்பினர்களுக்கு அந்த நாடுகள் விசா வழங்கமாட்டாதென அஞ்சுவதே இதற்கு காரணமாகும். இதில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகின்றது.

அரசாங்கம் ஒரு புறத்தில் காணாமற் போனோர் ஆணைக்குழுவுக்கு நியமிப்பதன் மூலம் வெளிநாட்டு தூதுவர்களின் தலையீடு வேண்டுகிறது. மறுபுறத்தில் காணாமற் போனோர் விடயத்தில் வெளிநாட்டு தூதுவர்களை அது தாக்குகிறது.

காணாமற் போனோர பற்றிய ஆணைக் குழுவுக்கு வெளிநாட்டவர்கள் நியமிக்கப் பட்டிருந்த அரசாங்கம் இரத்துசெய்ய வேண்டும். ஜனநாயகமும் சுதந்திரமான நீதி சேவையும் உறுதி செய்யப்பட்டு கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணை க்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படின் எமக்கு இவ்வாறான தலையீடுகள் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (6)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(7871)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 24 ¾<br>தகைமை/தொழில்: A/L / அரச தொழில்<br>தொ.இ: B/3485 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 72 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: G/2424 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 71 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / வெள்ளித் தொழில்<br>தொ.இ: B/3486 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L /அரச தொழில்<br>தொ.இ: G/2425 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 29 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L / வெள்ளித் தொழில்<br>தொ.இ: B/3487 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 31 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC (HONS) / ASST LECTURE<br>தொ.இ: G/2431 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 24 ¼ உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.SC,(HONS) / CIVIL ENGINEER (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3490 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 10 உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: O/L / சமூக சுகாதாரப் பணியாளர்<br>தொ.இ: G/2432 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





சாமியே சரணம் ஐயப்பா

**அனலையம்பதி** (அனலைதீவு)
**ஐயனார் ஆலயத்தில் இன்று ரதோற்சவம்.**

அந்தப் பதியில் தனிச்சிறப்புடன் விளங்கும்
கண்ணனும் நீ, கணபதியும் நீ, கந்தனும் நீயே
காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே.
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியுமாகிய பூரணை
புற்கலாநாயகன் மணிகண்டன் ஆரோகணித்து உன்னதமான அதி உயர் தேரில் ஏறி நாதஸ்வர தவில் மேதைகள், மங்கள வாத்தியங்கள் முழங்க மக்கள் போடும் சரண கோசம் வானத்தைப் பிளக்க ப்க்தி வெள்ளத்தில் மிதந்து வந்து அருள் மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியை காண வாரீர்!



காரை மணிகண்டன்

7247


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்துக்கு குடிநீர் வழங்குவதற்கு மாகாணசபை உறுப்பினர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சி காரணமாக யாழப்பாணத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதிலும் யாழ்.தீவுப்பகுதி மிகவும் மோசமான நிலையினை சந்தித்து வருகின்றது.

அங்குள்ள பிரதேச சபைகளால் தங்கள் வசமுள்ள பவுசர்கள் மூலம சாட்டி கிணறுகள், ஊர்காவற்றுறை சின்ன்மடு பகுதியிலுள்ள மூன்று கிணறுகள், நெடுந்தீவு சாராபிட்டி கிணறுகள் போன்றவற்றில் இருந்து நீரைப் பெற்று மக்களுக்கு வழங்கி வந்தாலும் அவற்றிலிருந்து பெறப்படும் நீர் போதுமானதாக இல்லை எனவும் குறிப்பிட்ட கிணறுகளில் இருந்து பெறப்படும் நீர் குடிப்பதற்கு உகந்த நிலை அற்றதாகவும் மாறி வரும் சூழலில் அங்குள்ள கால்நடைகளும் குடிநீரற்று இறந்து வருகின்றன.

இவை தொடர்பாக தீவகத்திலுள்ள பொது அமைப்புகளும் பொது மக்களும் எனக்கு சுட்டிக்காட்டியதை அடுத்து இது விடயமாக வடக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன சுற்றுச்சூழல் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்திற்கு கொண்டு வந்த போது அவர் அவசரமாக 6 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட சுமார் ஆறு பவுசர்களை தனது சொந்த முயற்சி மூலம் வடக்கிற்கான நீர் விநியோகத்திற்காக கொள்வனவு செய்வதற்காக கொழும்பு விரைந்துள்ளார் எனவும் ஒருவாரத்திற்குள் கொள்வனவு செய்யப்பட இருக்கும் ஆறு பவுசருக்குள் இரண்டு பவுசர்கள் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்கு தேவையான குடிநீரை வழங்கலாம் என வாக்குறுதி தந்துள்ளார்.

குறிப்பாக வேலணை, சரவணை, அம்பிகைநகர், நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு உட்பட ஏனைய கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் விரைவுபடுத்தப்படும்.

கடந்த மூன்று நாட்களாக நெடுந்தீவில் மட்டும் சில மணி நேரங்கள் தொடர்ந்து மழை பொழிந்துள்ளது.

தீவகத்தின் ஏனைய பகுதிகளில் தொடர்ந்தும் வறட்சி நிலையே காணப்படுகிறது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.(6)



வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் நூல் அறிமுகவிழா அண்மையில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் இடம் பெற்ற போது.
(படம் :- சிவநகர் செய்தியாளர்)

## படையினர் பத்து பேருக்கு காயம்

மரதன்கடவல, பாது ஓயாவிலுள்ள மதகு ஒன்றினுடைய பாதுகாப்புச் சுவருடன் இராணுவத்தினர் பயணித்த பேருந்து வண்டி பாதையை விட்டு விலகிச் சென்று மோதி விபத்துக்கு உள்ளானதால், 10 இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மின்னேரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(6)

## புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம்

வலி.வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கத்தின் ஊடாக இணைப்பாளர் ஆ.தரணிதரன் அறிவித்துள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 40 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 250 |
| தக்காளி | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 80 | 100 |
| கரட் | 100 | 120 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 80 |
| கறிமிளகாய் | 110 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 60 |
| போஞ்சி | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 |
| தேசிக்காய் | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 100

Search for people, places and things    Nagendram    Home

டொறின் மன்மதநாயகம்



எதுவுமே நிரந்தரம் இல்லாத
இவ்வுலகில் உங்கள்
கஷ்டங்கள் மட்டும் எப்படி
நிரந்தரம் ஆகும்?
கவலையை விடுங்கள்
வாழ்க்கையை முதலில்
வாழத் தொடங்குங்கள்!

-அன்னை திரேசா-

தர்ஷ் தர்ஷ்சன்




மதீசன் கணேஷ்

ஒரு நாள் எமதர்மன் ஒரு மனிதனிடம் வந்து சொன்னான். "மனிதா! இன்று உன்னுடைய வாழ்க்கையின் கடைசி நாள்"
மனிதன் : ஆனா நான் உன்னுடன் வர தயாராக இல்லை.
எமதர்மன் சொன்னான் : "நல்லது, இன்று உன்னுடைய பெயர்தான் பட்டியலின் முதலில் உள்ளது"
மனிதன் : சரி, நீங்கள் இருக்கையில் உட்காருங்கள், நாம் இருவரும் புறப்படுவதற்கு முன் ஒரு COFFEE சாப்பிட்டு விட்டு போகலாம்"
எமதர்மன் :சரி அப்படியே செய்யலாம்!


அந்த மனிதன் எமதர்மனுக்கு தூக்க மருந்து கலந்த COFFEE கொடுத்தான், குடித்தவுடன் எமதர்மன் நன்றாக தூங்கி விட்டான்! மனிதன் உடனே அந்த பட்டியலை எடுத்து முதலில் இருந்த தன் பெயரை எடுத்து விட்டு, கடைசியில் எழுதினான். எமதர்மன் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் அந்த மனிதனிடம் சொன்னான் நீ என்னிடம் மிகவும் நன்றாக அன்பாக நடந்து கொண்டாய், அதனால் நானும் உனக்காக என்னுடைய முடிவை மாற்றி கொண்டேன்...

என்னவென்றால் பட்டியலின் மேலிருந்து இல்லாமல் பட்டியலின் கீழே இருந்து உயிர்களை எடுக்க முடிவு செய்துள்ளேன் என்றான்!!!!

துஷி துஷி

தவறு செய்யும்
மனிதனை பார்த்து
தவறாக பேசாதீர்கள்,
எங்கள் வாழ்க்கை
இன்னும் முடியவில்லை..!

கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிபுணர் குழு ஓர் ஆலோசனை சபை

## ஜீ.எல்.பீரிஸ் விளக்கம்

சர்வதேச சட்ட நிபுணர்கள் மூவரை ஆலோசனை சபைக்கு நியமித்தமைக்கு செயன்முறை எதும் கிடையாது. இது ஓர் ஆலோசனை சபை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சர்வதேச சட்டத்தில் நிபுணர்கள் மூவரை ஆலோசனை சபைக்கு நியமித்தமைக்கு சட்ட அடிப்படை ஏதும் இல்லையென எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றினார்.

அந்த உரைக்கு பதிலளித்து உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிபுணர்களை நியமித்தமைக்கு செயன்முறை ஏதும் கிடையாது. இது ஓர் ஆலோசனை சபை. இந்த நிபுணர்கள், அரசாங்கம் எதிர்பார்த்த நம்பகத்தன்மையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களின் செயற்பாட்டுகாலம் பற்றி இப்போது நிச்சயமாக கூறமுடியாது. கொடுப்பனவுகள் தேவைக்கேற்ப தீர்மானிக்கப்படும் என்றார். ள(6)

# நிபுணர்களை நியமித்தமைக்கு சட்டரீதியான அடிப்படையில்லை

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச சட்ட நிபுணர்கள் மூவரை ஆலோசனை சபைக்கு நியமித்தமைக்கு சட்ட அடிப்படை ஏதும் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த 3 நிபுணர் கொண்ட குழு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இவ்வருடம மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தொடர்ந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிபுணர் குழுவை நியமிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறை, இந்த நியமனத்துக்கு பொறுப்பான முகவர், இவர்களுக்கான கொடுப்பனவுகள், இந்த கொடுப்பனவுகளுக்கான நிதி மூலம், இதன் செயற்பாடு காலம் என்பவற்றை அறிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (6)

# பிக்கு மாணவன் கட்டுண்ட நிலையில்

கடுகண்ணாவைப் பொலிஸ் பிரிவிலுள்ள திஸ்மட பிரதேசத்திலுள்ள விகாரையின் பிக்கு மாணவன் ஒருவனும் மற்றுமொரு சிறுவனும் கடத்தப்பட்டு கை,கால் மற்றும் வாய் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். தேயிலைத் தோட்டமொன்றிலிருந்து இவர் கள் மீட்கப்பட்டுள்ளனர். கடத்தப்பட்ட பிக்கு மாணவன் 13 வயதுடையவரெனவும் விகாரையில் இருந்த மற்றைய சிறுவன் 14 வயதுடையவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. விகாரையில் எவ்வித பொருட்களும் களவாடப்படாத நிலையில் இவர்கள் ஏன் கடத் தப் பட்டார்கள் என்பது தெரியவிலலை. இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசே காரணம்

## ஐ.தே.க.மீண்டும் குற்றச்சாட்டு



உள்ளக ரீதியில் விசாரண்ண நடத்தப்படாமையே சர்வதேச தலையீட்டுக்கு காரணம்எனஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லசுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு ரீதியில் விசாரணைகள் நடத்தப்படாமையே சர்வதேச தலையீட்டுக்கான காரணம் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை நடத்துமாறு 2011ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அரசாங்கத்திடம் கோரியிருந்தது. இந்த கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் வெளியிட்டிருந்தது.

எனினும் விசாரணைகள் நடத்தப்படவேயில்லை. இதன் காரணமாகவே சர்வதேச விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

என்ன காரணத்திற்காக உள்ளக விசாரணைகள் நடத்தப்படவில்லை என பல தடவைகள் கேள்வி எழுப்பியிருக்கின்றேன். இதுவரையில் பதில் எதுவும் அளிக்கப்பட்டதில்லை.

மீண்டும் நான் வெளிவிவகார அமைச்சரிடம் இந்தக் கேள்வியை முன்வைக்கின்றேன்.

சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஏன் காலம் தாமதித்து வருகின்றது?

வெளிவிவகார அமைச்சர் அம்பாந்தோட்டை விவசாயிகளுக்கு நாட்டின் வெளியுறவுகொள்கை பற்றி விபரிக்கின்றார்.

அமெரிக்காவை திட்டித் தீர்த்து அந்த நாட்டின் நிறுவனங்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன.

தமிழ்நாடு இலங்கைக்கு மிகவும் முக்கியமானது என கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியிருந்தார்.

சுதந்திரத்தின் பின்னர், இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரையில் நாட்டுக்கு எதிராக எவ்வித தீர்மானங்களும் சர்வதேச ரீதியில் நிறைவேற்றப்படவில்லை என லக்ஸ்மன் கிரியல்ல நாடாளுமனறில் சுட்டிக்காட்டியுள்ளார்.(6)

# இலங்கைக்கு போர்க் கப்பல் வழங்குவது குறித்து பதிலளிக்குக

## நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக்கு போர் கப்பல் வழங்குவது குறித்து மத்திய அமைச்சரவை செயலர் 4 வாரத்திற்குள் பதிலளிக்குமாறு உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

ஸ்டாலின் என்ற சட்டத்தரணி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதில், இலங்கை தமிழர்கள், தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துவதும், கொடூரமான முறையில் பலர் கொல்லப்படுவதும் வாடிக்கையாக உள்ளது.

இந்நிலையில் கோவா கடற்படை தளத்தில் உள்ள இரண்டு போர் கப்பல்களை மத்திய அரசு, இலங்கைக்கு வழங்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே இந்த கப்பல்களை இலங் கைக்கு விற்க தடை விதிக்க வேண்டும் என்று தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜெயச் சந்திரன், மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, இதில மத்திய அமைச்சரவை செயலர் 4 வாரத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை ஒத்தி வைத்துள்ளனர். (6)

# 100 வருடம் பழைமையான வாளுடன் மூவர் கைதாகினர்

100 வருடங்கள்பழைமையானது என நம்பப்படும் புராதன வாள் ஒன்றினை விற்பனை செய்ய முயன்ற மூவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதாக நம்பப்படும் வெள்ளி மற்றும் பித்தளை ஆகிய உலோகங்களைக் கலந்து செய்யப்பட்ட இந்த புராதன வாளை, சுமார் 36 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முற்படுகையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வாளினை விற்பனை செய்யப்போவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அவ்விடத்திற்கு சிவில் உடையில் சென்று வியாபாரி போல் நடித்து சந்தேகநபர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களையும் தோண்டி எடுக்கப்பட்ட வாளையும் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்த ஹற்றன் பொலிஸார மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# வெளிவிவகார அமைச்சு கட்சி அலுவலகமாக மாற்றம்!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைக் காரியாலயமாக வெளிவிவகார அமைச்சு செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

வெளிநாடுகளில் தூதுவர்களாக பணியாற்றி வரும் 49 தூதுவர்களில் 35 பேர், அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள் என கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சு கட்டுப்பாடற்ற ஒரு நிறுவனமாக செயற்படுகின்றது. அரசாங்கத்தின் சார்பில் குரல் கொடுத்த சரத் கொஹன்காகே இன்று தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் தூதுவராக கடமையாற்றியவர் ஜனாதிபதியின் உறவினராவார். இவருக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? ஜனாதிபதியின் துணைவியார் ஷிராந்தியின் சகோதரர் ஸ்ரீமால் விக்ரமசிங்க இன்று வியன்னாவின் தூதுவர். மாகாண சபை உறுப்பினர் பதவியை பெற்றுக் கொள்வது போன்றே, ஆளும்கட்சி உறுப்பினர்களின் பிள்ளைகள் இன்று வெளிவிவகார சேவையில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிவிவகார சேவையில் கடமையாற்றி வரும் ரவீந்திரன் மீள அழைக்கப்பட்டுள்ளார். இராஜதந்திர சேவையைச் சேர்ந்த 70 பேர் வரையில் வெளிவிவகார அமைச்சில் கடமையாற்றி வருகின்றனர்.

வெளிவிவகார அமைச்சின் உத்தியோகத்தர்கள் வீதியில் திரியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை மோசமானது. பாலஸ்தீனம் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? வோஷிங்டனுடன் இரகசிய கொடுக்கல்- வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. நிபுணர் குழு நியமிக்கப்பட்டமை குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லை என அனுர குமார திஸாநாயக்க கடுமையாக அரசாங்கத்தை சாடியுள்ளார். (6)

# பிரிவுத்துயர் பகிர்வு



**நல்லையா ஜெகநாதன்**

கைதடியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ஜெகநாதன் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 8.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, Woodbine Avenue, Markham, ON, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

**அருட்சகோதரி ஜோசப் அஞ்சலினா**



திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் குருசோ வீதியை பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்சகோதரி ஜோசப் அஞ்சலீனா கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இளவரசனின் தியாக உள்ளம்

குருசேத்திரம் என்ற நாட்டை மலையப்பிரபன் என்ற அரசன் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான்.

ஒருசமயம், அந்த நாட்டில் தொடர்ந்து மழை இல்லாததால் பஞ்சம் ஏற்பட்டது.

மக்கள் பட்டினியால் வாடி உயிர் இழந்தனர்.

கால்நடைகளுக்குத் தண்ணீர் இல்லை;

தீவனங்களும் இல்லை;

ஆதலால் அவை செத்துப் போயின!

குடிமக்களின் துயரத்தைக் கண்டு சகிக்க முடியாமல் அரசன் இரக்கப்பட்டு பக்கத்து நாடுகளி லிருந்து தேவையான உணவுப் பொருட்களை வரவழைத்து நாட்டு மக்களுக்கு வழங்க முன்வந்தான்.

ஆனால், சுயநலம் மிகுந்த சுரண்டல்காரர்களான அமைச்சர்கள் அரசனின் நல்ல நோக்கம் நிறை வேறாமல், சூழ்ச்சி செய்தனர்.

இளவரசனான இந்திரபிரபன், நாட்டு மக்களின் துன்பத்தையும் அமைச்சர்களின் போக்கையும் அறிந்து வேதனை அடைந்தான்.

தந்தையிடம் சென்று அமைச் சர்களின் தீய யோசனையைக் கேட்டு குடிமக்களை அழியவிடு வதுதான் ஆட்சி முறையா?

மக்களின் விருப்பத்தை நிறை வேற்றும் கற்பக விருட்சம் போன் றவர் அல்லவா அரசர்? என்று வாதாடினான்.

அமைச்சர்களின் கைப்பொம்மை யான அரசன் மகனின் பேச்சுக்குச் சிறிதும் இணங்கவில்லை.

மக்களின் விருப்பங்களை நிறை வேற்ற நான் குபேரன் அல்ல!

உனக்கு ஆற்றல் இருந்தால் நீ அதைச் செய்யலாமே என்றான் அரசன்.

தந்தை கூறியதைக் கேட்ட இளவ ரசன் கேட்டதை எல்லாம் கொடுக் கக்கூடிய கற்பகத்தருவாக இருக்க வேண்டும்.

அல்லது அந்த முயற்சியில் ஈடு பட்டு உயிரை விடவேண்டும் என்ற உறுதியோடு மலைப்பகுதிக்குச் சென்று கடுமையான தவத்தை மேற் கொண்டான்.

இளவரசன் இந்திரபிரபனின் தியாக உள்ளத்தை அறிந்த இந்திரன் கருணை காட்டி அவனுடைய விரு ப்பத்தை நிறைவேற்றினான்.

மக்களை வாட்டிய பஞ்சம் நீங்கியது; நாட்டில் மழை பொழி ந்தது!



மக்கள் வளத்தோடு வாழலானார்கள்.

பக்கத்து நாட்டிலிருந்தும்கூட மக்கள் அங்கு வந்து தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுச் சென்றனர்.

தேவை என்ற பேச்சே இல்லை.

இப்படி இருக்கும்போது இந்திரபிரபன் முன் இந்திரன் தோன்றி இந்த நில உலகில் உன்னிடமிருந்து உதவி கேட்டுப் பெற எவருமே இல்லை.

ஆகையால் இனி நீ சுவர்க்கத்துக்கு வந்து வாழ்வாயாக என்று அழைத்தான்.

இந்திரன் அழைப்பை ஏற்காமல் தேவேந்திரா! என் குடிமக்களை எல்லாம் கைவிட்டு என் நலனை மட்டுமே பெரிதாகக் கருதி நான் மட்டும் எப்படி வருவேன்? என்றான் இளவரசன் இந்திரபிரபன்.

அவனுடைய பரந்த நோக்கத் தைப் பாராட்டி உன்னுடைய நாட்டு மக்கள் எல்லோரும் சுவர்க் கத்துக்கு வந்து சேரட்டுமே என்று தாராளமாகக் கூறினான் இந்திரன்.

அவர்களை உங்கள் விருப்பம் போல் அழைத்துச் 'செல்லுங்கள்.

எதிர்காலத் தலைமுறையினருக்கு நான் இங்கு இருக்கவேண்டுமே! என்றான் இளவரசன்.

அவனுடைய கருணை உள்ளத்தை வியந்தான் இந்திரன்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

08.2014
09

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 48 - ஜூலியஸ் சீசர் பம்பீயை சமரில் தோற்கடித்தான். பம்பீ எகிப்துக்கு தப்பி ஓடினான்.
- 378 - உரோமப் பேரரசன் வேலென்ஸ் தலைமையிலான பெரும் படை எகிப்தில் தோல்வியடைநதது. மன்னனும் அவனது பாதிப்பங்குப் படையினரும் கொல்லப்பட்டனர்.
- 1048 - 23 நாட்களே பதவியிலிருந்த பின்னர் திருத்தந்தை இரண்டாம் டமாசஸ் இறந்தார்.
- 1173 - பீசா சாயும் கோபுரத்தின் கடடட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே முடிவுற்றது.
- 1655 - ஒலிவர் குறொம்வெல் பிரபு இங்கிலாந்தை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்.
- 1842 - ஐக்கிய அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் றொக்கி மலைகளின் கிழக்குப் பகுதியில் எல்லைகளுக்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- 1892 - தோமஸ் அல்வா எடிசன் தனது இருவழி தந்திக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1902 - ஏழாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1907 - இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஆகஸ்ட் 1 இல ஆரம்பிக்கப்பட்ட சாரணிய இயக்கத்தின் முதல பாசறை முடிவடைந்தது.
- 1942 - வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் துவக்கியதற்காக மகாத்மா காந்தி உட்பட பல இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மும்பையில் கைது செய்யப்பட்டார்.
- 1965 - சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தனி நாடாகியது.
- 1974 - வாட்டர்கேட் ஊழல்: அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் பதவி விலகினார்.

gpwg;Gfs;

- 1776 - அமேடியோ அவகாதரோ, இத்தாலிய வேதியியலாளர் (இ. 1856)

wg;Gfs

- 1962 - ஹேர்மன் ஹெசே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (பி. 1877)
- 1969 - செசில் பிராங்க் பவெல், நோபல் பரிசு பெற்ற பிரிததானிய இயற்பியலாளர் (பி. 1903)
- 1975 - திமீத்ரி சொஸ்தகோவிச், ரஷ்ய இசையமைப்பாளர (பி. 1906)
- 2000 - ஜோன் ஹர்சானி, நோபல் பரிசு பெற்ற ஹங்கேரிய பொருளியலாளர் (பி. 1920)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"


30

...எனவே, இந்தியாவை வீழ்த்தியே தீரவேண்டும் என்ற வெறியில் அவர்கள் இருந்தனர். 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி முதல் ஒருநாள் ஆட்டம் பெஷாவரில் துவங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஆனால், தட்பவெப்ப நிலை சரியாக இல்லாததால் ஆட்டத்தை நடத்த இயலாது என்று அறிவித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம். இந்த அறிவிப்பிற்கு இந்திய ரசிகர்களாக இருந்திருந்தால் அமைதி காத்திருப்பார்கள். ஆனால், அது பாகிஸ்தான் அல்லவா. ஆயிரக்கணக்கில் பணத்தைக் கட்டிவிட்டுக் கூடியிருந்த ரசிகர் கூட்டம் ஆட்டம் இல்லை என்றால் சும்மா இருக்குமா. இந்தியா தோற்பதைப் பார்க்க வேண்டும் என்று கூடிய கூட்டமாயிற்றே. ரகளையில் ஈடுபட ஆரம்பித்தார்கள். பார்த்தது கிரிக்கெட் வாரியம். ஒருநாள் போட்டி நடத்த முடியாது. எனவே, கண்காட்சி விளையாட்டாக அதை நடத்துவது என்று முடிவெடுத்தார்கள். பாகிஸ்தான் ரசிகர்களுக்கு அது அங்கீகரிக்கப்பட்ட போட்டியோ அல்லது அங்கீகாரம் இல்லாத காட்சிப் போட்டியோ எதுவாக இருந்தாலும் சரி இந்தியா தோற்பதைக் காணவேண்டும்.



வாக்கரிடமிருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கிலிருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண்டும் என்று கூறுவதுபோல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அவ்வளவுதான். எனவே, கிரிக்கெட் வாரியம் காட்சிப் போட்டிதான் என்றவுடன் மறுக்காமல் விளையாட்டைக் கண்டுகளிக்க ஆயத்தமானார்கள். தலா இருபது ஓவர்கள் என்ற கணக்கில் இரு அணிகளும் ரசிகர்களை குஷிப்படுத்த ஆடினர். பாகிஸ்தான் 4 விக்கெட் இழப்பிற்கு 157 ரன்கள் எடுத்தது. அதில் சலீம் மாலிக் எடுத்த ஓட்டங்கள் 75. இந்தியர்கள் 88 ரன்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தனர். மீதம் உள்ள ஓவ ர்களில் ஒரு ஓவருக்கு 15 ரன்கள்



எடுத்தால்தான் வெற்றி என்ற நிலையில் சச்சினும், ஸ்ரீகாந்தும் விளையாடத் துவங்கினர். முஷ்டாக் பந்து வீச சச்சின் பவுண்டிகளாக விளாசினான். அந்த ஓவரில் சச்சின் எடுத்தது 16 ரன்கள். வழக்கமாக இதுபோன்ற அதிரடி ஆட்டங்களுக்கு அந்த சமயத்தில் ஸ்ரீகாந்த்தான் புகழ்பெற்றவர். ஆனால், எதிர்முனையில் ஸ்ரீகாந்த்தை வைத்துக்கொண்டு என்னாலும் இதுபோன்று அதிரடியாக விளையாட முடியும் என்று சச்சின் சொல்லாமல் சொன்னான். அணியின் தலைவர் என்ற முறை

## குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

யில் சச்சின் ஆட்டத்தை ஸ்ரீகாந்த் அணு அணுவாக ரசித்துக்கொண்டிருந்தார். இந்த விடயத்தில் ஸ்ரீகாந்தைப் பாராட்டியே ஆகவேண்டும். இளம் கிரிக்கெட் வீரனுக்கு ஆலோசனைகள் சொன்னதுடன் அவனை விளையாட விட்டு முழுத் திறமையையும் கொண்டு வரக் காரணமாக இருந்தார் அவர். ஒரு ஜூனியர் தனக்கு முன்னே நன்றாக விளையாடுவதைப் பல சீனியர்களால் ஜீரணிக்க முடிவதில்லை. ஆனால், ஸ்ரீகாந்த் பரந்த மனதுடன் நடந்துகொண்டது அனைவரையும் கவர்ந்தது.

முஷ்டாக் பந்துகளை அடித்துத் துவைத்து எடுத்த சச்சினை மனதுக்குள் பாராட்டினாலும் தனது அணியைச் சேர்ந்த ஒருவன் பந்தை சச்சின் நொறுக்கித் தள்ளுவதை காதிரால் தாங்க முடியவில்லை. எனவே, பௌலிங் போட தனக்கு வாய்ப்பு வந்ததும் காதிர் நேரே சச்சினிடம் சென்று முஷ்டாக் வீசிய பந்தை அடித்தது போல் என் பந்து வீச்சில் வரும் பந்தையும் நொறுக்கலாம் என்று எண்ணாதே. உனக்கு தைரியம் இருந்தால் என் பந்தை அடித்து விளையாடு பார்க்கலாம் என்று கூறினார். அதற்கு சச்சின் சார் நீங்கள் உலகப் புகழ்பெற்ற வேகப்பந்து வீச்சாளர் உங்கள் பந்தை அடித்து விளையாட என்னால் முடியுமா? இல்லை நீங்கள் தான் விளாசித் தள்ள விட்டுவிடுவீர்களா? என்று பவ்வியமாகக் கூறினான்.

கே. ரமேஷ் (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 04 இன் பலன்கள்



60

### தோற்றம்

சனியுடன் ராகு சேர்ந்த ஆதிக்கப்பலன் இவர்களுக்கு அளவான உயரம் அமைந்திருக்கும். சனி பலம் மிகுமானால், குட்டையாகவே காணப்படுவர். ரெட்டை நாடி சரீரத்துடன் பருமனாக இருப்பர். நிறைய முடி, அளவான நெற்றி, அருள் பொழியும் கண்கள், எடுப்பான மூக்கு, சிறிய வாய் இருக்கும். சிவப்பாக இருப்பர். பற்கள் நன்கு வரிசையாக இருக்கும். சற்றுப்பெரிதாக இடைவெளிகளுடனிருக்கும். பின்னால் பற்கள் விழுந்துவிடும். சிறிது நீண்ட சதுர முகம். கள்ளங் கபடமின்றி நல்ல கௌரவமான மனிதர் என்னும்படி இருப்பார்.

### குணம்

இவர்களுக்கு மரியாதையே முக்கியம். சிறுவயதிலேயே பெரிய மனிதர்போல முதிர்ச்சியுடன் பேசுவார்; நடந்து கொள்ளுவர். நிறைய நண்பர் எங்கு போனாலும் அமைவர். சீட்டு, புகை, போதை என எல்லாப் பழக்கங்களும் இருந்தாலும் எதிலும் மிதமிஞ்சிப் போகமாட்டார். எந்த சிக்கலிலும் மாட்டிக் கொள்ளவும் மாட்டார். பின்னர் இவற்றை விட்டுவிடுவர். கடவுள் நம்பிக்கை இருக்கும். மூட நம்பிக்கை இருக்காது. போலிச்சாமியார், ஆயிரக் கணக்கான குட்டிக் குட்டித் தெய்வங்களின் வழிபாடு, போலி யோதிடர், போலி அரசியல் தலைவர்களான சுயநலவாதிகளையெல்லாம் பேச்சில் சாடுவார். இவர்தம் பேச்சு சுவாரசிமாக இருக்கும். பல தகவல்கள் வெளிப்படும். படிக்காத இவ் வெண்காரர்கூட நன்கு உறுதிப்படத் தம் அனுபவ ஆதாரத்துடன் பேசுவர். மனித நேயமுள்ளவர் இவர். பிறர் பசி பொறார். தன் பணத்திலிருந்து உதவுவர். நல்ல நிர்வாகி. பலரை வைத்து சிறப்பாக வேலையை முடிப்பர். பொதுத் தொண்டு, நல்ல காரியங்களை நன்கு கொண்டாடுவர். பிடிவாதம் உள்ளவர். எதற்காகவும் தம் போக்கை மாற்றிக் கொள்ள மாட்டார். ஆனால், இங்கிதமறிந்தவர். எல்லாச் சூழ்நிலையிலும் அனுசரித்து நடப்பர். நற்பெயர் பெறுவர். பிறர் ஏச்சு பேச்சு பற்றிக் கவலைப்படார். இவர்களின் நட்பு நலம் தருவது. ஆனால், மன்னிக்கும் குணமும் கொண்டவர். துணிவுள்ளவர். சண்டையிடார். சமயத்திற்கு ஏற்பப் பேசி நடந்து ஆபத்தை துன்பத்தைத் தவிர்ப்பர். விட்டுக் கொடுப்பர். தாட்சணியமாக நடந்து நட்டப்படுவர். மிகச் சிறுவயது முதலே பெற்றோரை விட்டுத் தனியாகவே பெரும்பாலானோர் வசித்து வருவர். வாழ்க்கையில் திடீர்த் திருப்பங்களும் எதிர்பாராத அதிர்ஷ்டமும் உண்டாகும். பெருஞ்செலவாளிகளை இவர்கள் சேர்க்க மாட்டார்கள். தெரிந்தவர் தெரியாதவர் அனைவருக்கும் நல்லவராக இருந்து எல்லார் பிரியத்தையும் பெறுவர். ஒருவரை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுவர். வேண்டாமெனில் கழற்றிவிட்டுவிடுவர். மிகுந்த எச்சரிக்கையாக இருப்பர். காரணம் பழைய அனுபவம்.

### குடும்பம்

சிறுவயதிலேயே குடும்பத்தைவிட்டுப் பிரிந்து விடுவர். இளமையிலேயே பெற்றோர் இறந்துவிடுவதும் உண்டு. சுறுசுறுப்பாக வேலை செய்வர். எனவே, பிறர் குடும்பத்துடன் இணைந்தும் வாழ்வார். காதல் இடம்பெறும்; தோல்வியில் முடியும். திருமணம் செய்துகொண்டு பல குழந்தைகளைப் பெறுவார். பாசமாக குடும்பத்தை நிர்வகிப்பர். சிலருக்கு மணமே நடப்பதில்லை. நடந்தால் மனைவிக்குக் குடும்பம் நடத்தும் சாமர்த்தியம் இருப்பதில்லை. இருந்தாலும் சில சமயத்தில் திட்டினாலும் ஆதரவாகக் குடும்பத்தை நடத்துவர். வீட்டைவிட வெளியிலேயே அதிகம் பொழுதைக் கழிக்கும் இவர்கள், பிற பெண் தொடர்பு வைத்திருப்பர். வயதான சமயம் சில பெண்களால் அதிர்ஷ்டம் ஏற்படும். எப்போதாவது எதாவது குற்றச் செயலை இவர்கள் செய்துவிடுவர். குடும்பத்தில் பிள்ளை, மாப்பிள்ளை என உறவினருடன் தகராறு சண்டை நிகழும். சமாளிப்பர். மதிப்பை விடமாட்டார். பிற்காலத்தில் தனிமையில் இருக்க நேரும்.

### தொழில்

சிலர் படிப்பு தடையேற்பட அனுபவக் கல்வியே பெரிதாக பெரும் தொழில் திறமையை அடைவதுண்டு. ராகு பலம் அதிகமானால் நன்றாகப் படித்துப் பட்டம் வாங்கி இருப்பர். என்ஜினியரிங் படிப்பர். அச்சகக் கலைப் படிப்பும் கணினிப் படிப்பும் கணக்கியலும் சட்டம் மருத்துவம் போன்ற துறையிலும் படிப்பர். ஆசிரியராகவும் பத்திரிகைத் துறையிலும் இருப்பர். பேச்சில் சிறந்த இவர்கள் அரசியலும் மேடைப் பேச்சாளராக இருந்து பெரும் பதவி பெறுவர். சப்ளையராக தொழிற்சாலை தொடர்பு பெற்றிருப்பர். சட்ட ஆலோசகராக அரசியல் நோக்கராக இருப்பர். ஓட்டல் நடத்துவர். உணவு தயாரிக்கும் ஒப்பந்தக்காரராகப் பிரபலமடைவர். ஜோதிடராவர். துறவிகளாகிமடத் தலைவருமாவர். எழுத்தாளராவர். நன்கு சம்பாதிப்பர். வறுமையை வென்றிடுவர்.

### நோய்கள்

எடுத்துக்கொண்ட வேலையில் டென்ஷனடைவதால் உயர் ரத்த அழுத்தம் வரும். காய்ச்சலும் கண்கோளாறும் வரும். நீரிழிவு, மூலம், வயிற்றுக்கோளாறு வரும். பிற்காலத்தில் மறதியும் மனம் ஒருங்கிணைப்பற்ற நிலையும் வாதமும் உண்டாகும். இதய அடைப்பும் ஏற்படும். கபம் சீக்கிரம் பாதிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -13

## வரட்சியின்போது தாவரங்களை பாதுகாக்க–உயிர்காக்கும் பானை நீர் தொழில்நுட்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வரட்சி...வரட்சி...வடபகுதியை வரட்சி வாட்டியெடுத்துக் கொண்டிருக்கின்றது. தாவரங்களெல்லாம் வாடி வதங்கியிருப்பதை பார்க்க நெஞ்சம் பதைபதைக்கின்றது. கடந்த இரண்டு வருடங்களாக பெய்யவேண்டிய மழை பொய்த்ததே இதற்கு காரணமாகும். இதனை எல்நினோர்வின் தாக்கமாக வானிலை ஆய்வு நிலையம் கணித்திருக்கின்றது.

இன்னும் என்ன நடக்கப்போகின்றதோ என ஊகிக்கமுடியவில்லை. இயற்கையை விஞ்சி என்ன செய்ய முடியும. சந்திரனிலும் செவ்வாயிலும் நீர் தேடிச்செல்லும் விஞ்ஞானம் இங்கே வரண்டிருக்கும் பூமிக்கு நீர்பெற வழிசெய்ய முடியவில்லை என ஏக்கத்துடன் கூறினார் பெரியவர் ஒருவர்.

இதுவே இப்படியென்றால் நாளை எப்படியிருக்கும் என நாம் எவருமே ஊகிக்க முடியவில்லை. மழை பொய்த்ததற்கு காரணங்கள் பல. ஒரு சிலர் இது வழமையான வரட்சியென சாக்குப் போக்கு கூறினாலும் இம்முறை வந்திருக்கும் வரட்சி பல செய்திகளை எமக்கு உணர்த்தியிருக்கின்றது. வருகின்ற மழைநீரை முடிந்த வரை தேககி வைக்க வேண்டும் என அடிததுக் கூறியிருக்கின்றது.

இருக்கின்ற நன்னீரை சிக்கனமாக பயன்படுத்தவும் விரயமாகும் கழிவு நீரை மீள்சுழற்சி செய்து பயன்படுத்துவதற்கும் பரிந்துரைத்திருக்கின்றது. குடிநீருக்கு பஞ்சம் ஏற்படும் நிலைக்குள் வந்திருக்கின்றோம் என்பது கற்றறிந்தவருக்கும் பட்டறிந்தவருக்கும் இன்னும் புரியவில்லை என்பதுதான் விசித்திரமாக இருக்கின்றது. இந்த விசித்திரத்தில் யாழ்ப்பாணத்து நீரை போத்தலில் அடைத்து வணிகம் செய்யும் முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. ஒருவகையில் எம்மவருக்கான தொழில் முயற்சியாக இதனை வரவேற்றாலும் இப்படி ஒருபக்கம் வரட்சியும் மறுபக்கம் மழையும் பொய்த்துப்போயிருக்கும் போது இருக்கின்ற நன்னீரை போத்தலில் அடைத்தால் வருங்காலத்து சந்ததிக்கு குடிப்பதற்கு நீர் எங்கிருந்து வரும்?

இங்குள்ளவர்களின் புலமையில நம்பிக்கையல்லாமல் வெளித்தேசத்திலிருந்து புலமையாளர்கள் வந்து பரிந்துரைக்க வேண்டியிருக்கின்றது.

வெளித்தேசத்திலிருந்து எவர் எப்படி வந்தாலும் எங்கள் வளத்தை நாங்கள்தானே பாதுகாக்க வேண்டும். எமது சந்ததியை நாங்கள் தானே வளர்த்தெடுக்க வேண்டும். அவரையும் இவரையும் நாங்கள் இதற்காக நம்பியிருக்கலாமோ?

வடபகுதியில் மழையே இல்லையென்றாகியிருக்கும் போது தென்பகுதி மழையினால் துவண்டு போயிருக்கின்றது. தென்னிலங்கையில் மழை வீழ்ச்சி வெள்ளமாக மாறியிருக்கின்றது. இயற்கையின் விளையாட்டைப் பார்த்தீர்களா! தேவையான இடத்தில் பெய்யாமல் தேவையற்ற இடத்தில் அடித்துப்பெய்திருக்கின்றது.

இந்த விளையாட்டினால் இரு பக்கமுமே பாதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே வரட்சி நிவாரணம். ஆனால் அங்கே வெள்ள நிவாரணம். இந்த நிலைமையிலிருந்து எம்மைக்காப்பாற்றிக்கொள்வது மிகவும் கடினமானதாகும். எமக்கே இந்த வெப்பநிலையை தாங்கமுடியவில்லையெனும் போது சூழலிலுள்ள தாவரங்கள், விலங்கினங்கள் நீரின்றி வதைபட்டு இறக்கும் நிலைக்கு செல்ல வாய்ப்புக்கள் அதிகமாகும். மண்ணியல் விற்பன்னர் பேராசிரியர் ஜேசுவாவின் கருத்தினை செவிமடுப்பது நல்லது.

இவ்வாறான வரட்சி குறித்த கால இடைவெளியில் எமது பிரதேசத்தில் இருந்து வந்திருக்கின்றது என்பதனை 40 ஆண்டுகளில் மழை பெய்யும் தரவுகளை வைத்துப் பார்த்தால் புரியும்.

அவ்வாறெனில் இவ்வாறான இடரினை நாம் எதிர்கொள்ள எம்மை தயார்ப்படுத்த முடியாதிருப்பதேன்? விஞ்ஞானத்தின் தொழில்நுட்பத்தை எமக்குள் உள்வாங்கி இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு கண்டாக வேண்டும். இதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பிப்பது அவசியமானதாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் பிரதேசங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றதாக அறிய முடிகின்றது. குறிப்பாக மரங்கள் காய்ந்து கருகத்தொடங்கிவிட்டன. தென்னை மரங்களின் வட்டுப்பகுதி சரிந்து முழு மரமுமே பட்டுப்போகின்ற நிலைக்கு வந்திருக்கின்றது. கிணறுகளில் நீரைக்காண முடியாதிருக்கின்றது. அனைத்தும் வற்றிவிட்டிருக்கின்றது.

இந்நிலையில் பயன்தரும் மரங்களை காப்பாற்றாது விட்டால் இழப்பு அதிகமாகிவிடும். மரங்களை காப்பாற்ற உயிர்நீர் முறைமையை அவசியும் பயன்படுத்தல் வேண்டும். இதற்காக பானை நீர்ப்பாசனமுறையை மாற்றியமைத்து மரங்களைக் காப்பாற்றலாம்.

ஒவ்வொரு தென்னமரத்தின் கீழும் பானைகளை மண்ணினுள் வாய்ப்பகுதி வெளியே தெரியுமாறு புதைத்து அதனுள் நீர் விட்டு மரத்திற்கு தேவையானளவு நீரை சிறிது சிறிதாக கொடுக்கலாம். இது மரத்தின் தேவைக்கு போதாதெனினும் இருக்கின்ற நீரை. பகிர்ந்தளித்து தாவரத்தை உயிர்காக்க வைக்கும் எளிய தொழில்நுட்பமாகும். பயன்படுத்தும் பானையின் வாய்ப்பகுதி ஒடுக்கமாக இருப்பது நல்லது.

பானையை உருவாக்கும் போது பூசிமெழுகாது அதனது சுவர் சொர சொரப்பாக இருப்பது நல்லது. நீர் பானையிலிருந்து கசிந்து செல்லக்கூடியவாறு இருக்க வேண்டும். மேலும் நீரின் அளவை அதிகரிக்க பானையின் கரைப்பகுதியில் அளவான துளையிட்டு அந்த துளையினை தும்பு அல்லது பஞ்சினை அடைத்து நீர் மெல்ல மெல்ல கசியக்கூடியவாறு செய்து விடலாம்.

இதற்காக பானைக்கு எங்கு செல்வது என யோசிக்க வேண்டாம். குடிப்பதற்காக யாழ்ப்பாணம் வரும் வெற்று தண்ணீர் போததல்களை தலைகீழாக கவிழ்த்து அடிப்பகுதியினூடாக நீரை விட்டு தாவரத்திற்கு உயிர்கொடுக்கலாம்.

இந்த தொழில்நுட்பத்தை மாற்றியமைத்தும் நீங்கள் பயன்படுத்தலாம். மாணவர்களுக்கு இதனை சொல்லிக்கொடுத்து உங்கள் பகுதி மக்களுக்கு இதுபற்றி தெரியப்படுத்துங்கள்.

பல்லாண்டு தாவரங்களை அதிலும் பயன்தரும் மரங்களை நாம் அநாவசியமாக வெயிலின் கொடூரத்தில் காய விட்டு இழந்துவிடக் கூடாது.




இதனால் எமக்கான இழப்பு அதிகமாக இருக்கும். பல இடங்களில் குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துவதற்கு நனனீர் இல்லையென்றாகி உயிர்களனைத்தும் துவண்டிருக்கும் நிலையில் நீரை சரியான முறையில் சேமித்து பாதுகாத்து சிக்கனமாக பயன்படுத்துவதற்கு விரைந்து முயற்சியெடுக்க வேண்டும்.

இவ்வாறான கால கட்டத்தை முன் கூட்டியே அனுமானித்தால் அதற்கான தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் நீர்த்தேவை அதிகமற்ற பயிர்களை பயிர்செய்ய ஊக்குவிக்கலாம். உயிரஙகிக்கு அவசியமானவற்றில் முக்கியமானது நீர். நீரின்றி இவ்வுலகமில்லை, உயிரினங்களும் இல்லை. கிடைக்கின்ற நீரை நாம் சிறந்த முறையில் சிக்கனமாக பயன்படுத்தாமல் இவ்வாறு எவ்வளவு காலத்திற்கு அவதிப்படுவது. இந்த நிலையில் வடபகுதியின் பல இடங்களில் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் நீர் வீணாக்கப்படுவதையும் காணமுடிகின்றது.

இவ்வாறான இக்கட்டான தருணத்தில் திருகிகள் பழுதடைந்த காரணத்தால் நீர் அநாவசியமாக வீணடிக்கப்படுவதை நல்ல இதயமுள்ள மனங்கள் என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டாது.

வடபகுதியிலுள்ள தாவரங்கள், உயிரினங்கள் அனைத்தும் வாய் பேசமுடியாததால் மௌனித்து உயிர் துறக்கும் போது எளிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தாவரங்களை குறிப்பாக பயன்தரும் மரங்களை இன்னும் நிழல் தரும் விருட்சங்களை விரைந்து காப்பாற்றியாக வேண்டும்.

நீர் இயற்கையால் தரப்பட்டதொன்று. எதுவுமே இல்லாத நிலையில் மழையாகி மழைத்துளியாகி மண்ணில் வந்த நீருக்கு நிறமும், மணமும், சுவையும் கொடுத்து விற்பனைப் பண்டமாக்கிய மனிதன் அதனை வைத்து இன்னும் ஏதேதோ செய்ய நினைப்பதுதான் விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருக்கின்றது. சமூக பொறுப்புள்ள எவருமே நீரை விரயம் செய்யமாட்டார்கள்.


இறுதியில் கடைசி மூச்சை அந்த உயிரை விடுவதற்கு ஒருதுளி நீர் தேவைப்படும் என்பதை இன்னுமாவது உணர்ந்து இயற்கை தந்ததை அனைவருக்கும் கிடைக்கச் செய்து இவ் வையகம் வாழ நாம் முயற்சிப்போமாக. தாவரங்களை குறிப்பாக மரங்களை உயிர்காக்கும் நீரைக் கொடுத்து விரைந்து காப்பாற்றியாக வேண்டும்

இது காலத்தின் கட்டாயமும் கூட. ஒக்டோபர் மாதம் வரை வரட்சி தொடரும் என்பது இன்னும் கசப்பான செய்தியாக வந்திருக்கின்றது. எமது சூழல்தொகுதியிலுள்ள உயிரினங்களை இழந்து விட்டு நாம் மட்டும் வாழ்ந்து பிரயோசனமில்லை. வரட்சிக்கும் வரட்சியால் பாதிப்புக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்

மக்களை வரட்சிக்கு தாக்குப் பிடிக்க வழிநடத்த வேண்டும். மக்களாயினும் மரமாகினும் உயிர் தொகுதியில் அனைத்திற்கும் தனிப்பட்ட பங்குண்டு. நல்லூர் கந்தப் பெருமானின் உற்சவ காலத்திலாவது உயிர்காக்கும் மழை அனைத்து உயிரினங்களையும் குளிரச் செய்ய வடபுலமெங்கும் பெய்து உயிரினங்கள் தப்பிப் பிழைக்க நாம் அனைவரும் வழிபடுதல் வேண்டும். இயற்கையை வேண்டுதலின்றி வேறென்ன முடியும். இயற்கைதான் இறைவன். இறைவன்தான் இயற்கை.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XII





யாழ்.சங்கானையில் 32 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள சந்தைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அடிக்கல்லினை நாட்டி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த யுகமே முன்னணியில் பெருமைகொள்ளும் அமைச்சர்

(கொழும்பு)

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுகமானது ஏனைய யுகங்களை விட முன்னணியில் இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தல் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 63 ஆவது ஆண்டு நிறைவு விழா பதுளை நகரில் நடைபெறும்.

அத்தோடு தேர்தல் பிரசாரங்களுக்கு உரிய முறையில் திட்டமிட்டு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாணத்தில் சில பகுதிகளில் வறட்சி நிலவும் சூழ்நிலையில், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நியாயமான முறையில் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

வறட்சியுடன் தேர்தல் பிரசாரங்களை செய்தமை தொடர்பில் அனுபவங்கள் உள்ளன. வட மத்திய மாகாண சபைத் தேர்தலில் இவ்வாறான நிலைமையை அரசாங்கம் எதிர்நோக்கியது.

அரசாங்கத்திற்கு எதிரான தேர்தல் பிரசாரத்திற்காக எதிர்க் கட்சிகள் வறட்சி என்ற கருப்பொருளை பயன்படுத்தி வருகின்றன.

வறட்சி ஏற்படும் போது நிவாரணங்களை வழங்க மட்டுமே அரசாங்கத்திற்கு முடியும்.

இதனடிப்படையில் அரசாங்கம் என்ற வகையில் மக்களுக்கு தேவையான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொண்டு தேர்தலில் வெற்றி பெறுவோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார் (6)

# சிறையிலிருந்தபடியே போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## தொலைபேசியில் தொடர்வதாக தகவல்

சிறையில் இருந்து கொண்டே மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

சிறையில் தண்டனை அனுபவித்து வரும் குற்றவாளிகள் செல்லிடப்பேசிகளின் மூலம் இவ்வாறு போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


கைதிகள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதனை தடுப்பது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஏற்கனவே பல தடவைகள் அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளேன்.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் ஆலோசனைகள் உரிய முறையில் பின்பற்றப்படுகின்றதா என்பது குறித்து கண்காணிக்கப்பட உள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட நபர்களை கைது செய்யும் பொலிஸார் அது தொடர்பிலான தகவல்களை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வழங்குமாறு புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சிறையில் இருந்துகொண்டே போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களை கட்டுப்படுத்த சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என கோத்தபாய ராஜபக்ஷ சிங்கள ஊடக மொன்றுக்கு தெரிவித்துள்ளார். (6)

# பிக்குகளைக் கட்டுப்படுத்த எவருக்கும் அதிகாரமில்லை



பௌத்த பிக்குகளை கட்டுப் படுத்தும் சட்ட அதிகாரம் எவருக்கும் கிடையாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்கு ஒருவர் ஒழுக்க விதிகளுக்கு முரணான வகையில் செயற்பட்டால் அவரை மாநாயக்க தேரர்கள் கட்டுப்படுத்த முடியும் எனவும், அவ்வாறு மாநாயக்க தேரர்களின் அறிவுரையை பௌத்த பிக்கு செவிசாய்க்கத் தவறினால் செய்வதற்கு எதுவுமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் ஒரு சில பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த பௌத்த பிக்கு சமுதாயத்தையுமே பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்று காலம் முதல் தேசத்தின் சுய மரியாதையை உறுதிசெய்ய பௌத்த பிக்குகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பிற்கு பௌத்த பிக்குகள் முக்கிய பங்களிப்பினை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையிலும் தொடர்ச்சியாக நாட்டுக்கு எதிரான சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

தெய்வீக இசையரங்கு

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.


ஒன்பதாம் நாளான இன்று சனிக்கிழமை சங்கமம் இசை மன்ற மாணவர்கள் வழங்கும் வயலினிசை இடம்பெறவுள்ளது. இதில் மிருதங்க இசையினை பிரம்மஸ்ரீ சிவ சுந்தர சர்மாவும் வழங்கவுள்ளார். இசையரங்கத்தில் பாடல் திருமதி ஸ்ரீ ரஞ்சனி ரமணாவும் வயலின் கே.குகபரனும் மிருதங்கம் வி.ரமணாவும் கெஞ்சிரா பிரம்மஸ்ரீ சிவசுந்தர சர்மாவும் வழங்கவுள்ளனர்.

(சொற்பொழிவு)

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டப முன்றிலில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வுகளாக வே.சிவராசா வழங்கும் பெருமைகள் மிளிரும் பெரியபுராணம் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவும் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அறநெறிப் பாடசாலை, மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை, புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப் பாடசாலை மற்றும் சில்லாலை முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று ஒன்பதாம் திருவிழா



## நிம்மதியை தாருமையா

நல்லூர்க் கந்தனே நலம்பல அருளப்பா
சிவபிரான் மைந்தனே சீலத்தைக்காரப்பா
உமையின் மைந்தனே ஊழ்வினையை போக்கிடப்பா
விநாயகனின் சோதரனே வேல் கொண்டு வா அப்பா
வேல்தன்னை வீசிவிட்டு வீணர்களை அழித்திடப்பா
நீர் தான் கதியையா நிம்மதியை தாருமையா

இராசு.மங்களேஸ்வரி(வட்டுக்கோட்டை)

## கந்தா எனைக் கண்டிலையோ

நான் வணங்கும் கடவுள் நானிலத்தில்
நல்லைப் பதியுறை கந்தன் என்பேன்
சொல்லெடுத்து வில்போல் பாட்டாக்கி
அம்புபோல் பக்தி எய்துகின்றேன் அன்பால்
கான மயில் வாகனனின் புன்னகையை
காண்பதற்கே யாவரும் ஓடுகின்றார்
கந்தா நினைக் கவர்ந்ததனால் எனைக் கண்டிலையோ நீ

தேஜஸ் பிரணவன்

## நல்லூர்க்கந்தா

பக்திக்கு பரிசாக பக்தர் துயர் நீக்கும் வேலின் நீட்சி
திக்கெட்டும் புகழ்பரப்பும் ஐயா நின் திருத்தலத்தின் மாட்சி
எக்குறை வரினும் அபயமருள் நின் பேரருள் காட்சி
மிக்குயர் நின் திருப்பெருவடிவம் கண்டால்
நிலைக்குமோ பகையின் ஆட்சி

ஸ்ரீ.நதிபரன்(நல்லூர்)

## வண்ணத் தமிழ் முருகன்

வண்ணத்தமிழ் முருகன் அவன் நல்லையில் அமர்ந்தான்
வண்ணை ஓங்கு புகழ் பெற்றது முருகன் திருவருளாலே
வண்ணத்து பூச்சிபோல் குன்று தோறும் சென்று வருவான்
வெண்சங்கு நாதம்போல் அருள்அள்ளி வீசிடுவான்
கண்மூடித் துதித்திருக்க எம்முன்னே தோன்றிடுவான்
மண்ணுலோர் திகைத்திடவே காத்திடுவான் உம் தமிழ் முருகன்

நீரூர் முருகதாசன்

## நல்லைக் குமரா ஓடிவா

ஆடும் மயில் மீதமர்ந்தே வள்ளி தெய்வயானையுடன்
நாடும் வரங்கள் தரும் நல்லைக் குமரா
கூடும் பக்தர்வெள்ளம் நாளும் உன் காலடியில்
ஓடும் கண்ணீர் சொரிகின்றார் சோர்ந்து வீழ்கின்றார்
பாடும் புகழ்மாலைகள் செவிகளில் விழவில்லையோ
வீடும் நிலமும்மின்றி தவிப்பதுவும் தெரியலையோ

கலாபூசணம் மா.அனந்தராசன்(அல்வாய்)

## நல்லையில் ஓர் சர்வாதிகாரி

நல்லை மாநகரினில் ஓர் சர்வாதிகாரி அவன்
எல்லையில்லா அருள்தரும் பெரும் உபகாரி
தில்லைக்கூத்தன் பெற்றெடுத்த சண்முகநாதன் அதிகாரி
தொல்லைகள் நீக்கும் அவனருகே இரு ஒய்யாரி
ஈந்திரு என்கை ஏந்துவோர்க்கு அவன் பரோபகாரி
அன்போடு அணைத்துக் காப்பான் நல்லூர்க்கந்தன்

கி.கபில்ராஜ்(யாழ்/சென்.பரியோவான் கல்லூரி)

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

ஞானப் பழத்துக்காய் ஞாலத்தைச் சுற்றி வந்து
தேனெனவே தத்துவத்தைத் தீட்டியவன்–வானவரும்
மண்ணவரும் போற்றும் மறை நல்லைக் கந்தனவன்
எண்ணியவர் நண்ணும் இறை

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம் வடியும் யுத்தபூமி!

பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு பகுதியில யூத இனத்தவர் தாங்களது சுதந்திர நாட்டையும் மறுபகுதியில் அரபு இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டையும் அமைத்துக்கொளள வேண்டும்."

"இன்று 10 குழந்தைகள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டார்கள்"- "இன்று 20 குழந்தைகள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டாரகள்" - என்பது போன்ற செய்தி கள் நாள்தோறும் வெளியாகின் றன.

பாலஸ்தீன நாட்டின் காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்திவரும் கொடூரமான குண்டு வீச்சில் கொல்லப்படும் பொதுமக்கள்தான் இவர்கள். கொல்லப் படும் பொதுமக்கள் இஸ்ரேலிய இளைஞர்கள் 3 பேர் பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் கொல்லப்பட்டார்கள்.

"இவர்களை ஹமாஸ அமைப்பினர்தான் கொன்றார்களா. எனவே ஹமாஸ் அமைப்பினர் வலுவாகவுள்ள காசா பகுதியில் தாக்



குதல் நடத்தி அவர்களை அழிக்கப் போகிறோம்" என்று இஸ்ரேல் கூறியது. ஆனால் அதற்கான எந்த ஆதாரத்தையும் அளிக்கவில்லை.

கடந்த ஜூலை 8ஆம் தேதி இஸ்ரேல் ராணுவம் தாக்குதலைத் தொடங்கியது. இதனால் கடந்த 22 நாட்களில் நூற்றுக் கணக்கான குழந்தைகள் உட்பட 1,250 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பதிலடியாக ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது குண்டு வீசியதில் 50இற்கு மேற்பட்ட இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை ஆயிரம் இல்லை. ஒரு லட்சத்துக்கும் மேல், அங்கே இஸ்ரேல் என்ற நாடு செயற்கையாக உருவாக்கப்பட்ட 1948 ஆம் ஆண்டு முதல் கணக்கிட்டால்.

அதுமட்டுமல்ல் லட்சக்கணக்கானோர் படுகாயம் அடைந்து ஊனமானார்கள். 70 லட்சம் பேர் வெளி நாடுகளில் அகதிகளாக உள்ளனர். மற்றவர்கள் சொந்த நாட்டிலேயே மேற்குக் கரைப் பகுதியில் 25 லட்சம் பேரும், காசா பகுதியில் 15 லட்சம் பேரும் அகதிகளைப் போல் வாழ்கிறார்கள்.

### எப்படி ஏற்பட்டது இந்தச் சோகம்? இதன் வரலாறு என்ன?

"ஆப்ரஹாமை நோக்கிக் கர்த்தர் சொன்னார். 'நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனாருடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ".

கர்த்தர் காட்டிய தேசம், 'கானான தேசம்'. அப்போது அந்த தேசத்தில் பிலிஸ்தீனியர்கள், கானானியர்கள், பீனிசியர்கள் உட்படப் பல பழங்குடியினர் இருந்தார்கள். இந்தக் கானான் பிரதேசத்தில் ஆப்ரஹாமும் அவரைச் சார்ந்தவர்களும் குடியேறி னார்கள்.

ஆப்ரஹாமின் சந்ததியில் தோன்றிய ஜேக்கப் தனது இனத்தவருக்குப் பெரும் தலைவராக விளங்கினார். ஜேக்கப் பின்னாளில் 'இஸ்ரேல்' என்று அழைக்கப்பட்டார். அவரது சந்ததியினர்தான் 'இஸ்ரேலியா' அல்லது 'யூதர்கள்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த கானான் தேசம் 'இஸ்ரேல்' என்று அழைக்கப்பட்டது.

எனினும் அண்டை நாடுகளில் அடுத்தடுத்து அமைந்த பேரரசுகள் இஸ்ரேலை ஆக்கிரமித்து, யூதர்களைக் கொடுமைப்படுத்தி, விரட்டியடித்தன. இஸ்ரேலின் பெயரும் பின்னாளில் மாற்றப்பட்டு 'பாலஸ்தீனம்' என்று பெயரிடப்பட்டது.

எனவே 'பைபிள்'படி யூதர்களுக்குக் கர்த்தர் கடவுள் கொடுத்த தேசமான பாலஸ்தீனத்தில் மீண்டும் யூதர்கள் குடியேறி, இழந்த நாடடைக் கைப்பற்ற வேண்டும்" என்று அறிவித்து, 'ஜியோனிஸ்ட் இயக்கம்' தோன்றியது 1897ஆம் ஆண்டில். சுருங்கிவரும்பாலஸ்தீனம இதை மறுத்தார்கள் அரபு இனத்தைச் சேர்ந்த பாலஸ்தீனியர்கள்.

"பைபிள்படியே பார்த்தால் கூட பாலஸ்தீனத்தின் பழங்குடியினர், மண்ணின் மைந்தர்கள் பிலிஸ்தீனியர்களும், மற்ற பழங்குடியினரும் தான். பிலிஸ்தீனியர்களின் தேசம் தான் பாலஸ்தீனம் எனப்பட்டது. அவரகளது சந்ததியினர்தான் அரபு இனத்தைச் சேர்ந்த பாலஸ்தீனியர்களாகிய நாங்கள். மறுபுறம் வரலாற்றின்படி பார்த்தால் சிரியாவின் ஒருபகுதியாகத்தான் பாலஸ்தீனம் இருந்தது. சிரியா, அரபு நாடுதான். எனவே எங்கள் தாயகமான பாலஸ்தீனத்தை வேறு எவரும் ஆக்கிரமிக்க விடமாட்டோம்" என்றார்கள் பாலஸ்தீனியர்கள்.

அப்போது பாலஸ்தீன மக்கள் தொகையில் 92 சதவிகிதம் பேர் பாலஸ்தீனியர்கள், 8 சதவிகிதம் பேர்தான் யூதர்களும், மற்ற இனத்தவர்களும். இந்த நிலையில் குறுக்கிட்டது முதல் உலகப் போர். பாரில் அராபியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக மெக்காவின் ஷெரீஃபுக்கு பிரிட்டன் ஒரு வாக்குறுதி அளித்தது. "மேற்கே மத்தியதரைக்கடல் முதல் கிழக்கே பாரசீக வளைகுடா வரை உள்ள பெரும் நிலப் பகுதிகளில் அரபு மக்கள் த்ங்களது 'அகன்ற அரபு தேசத்தை' அமைத்துக் கொள்ள பிரிட்டன் ஏற்பாடு செய்யும்."

மறுபுறம் இதற்கு நேர் மாறாக யூதர்களின் ஆதரவைப் பெற யூதர்களுக்கும் பிரிட்டன் ரகசியமாக வாக்குறுதி அளித்தது. "யூதர்களுக்கு ஒரு தனி நாட்டை பாலஸ்தீனத்தில் அமைக்க பிரிட்டன் ஏற்பாடு செய்யும்"இரட்டை வேடம் ? அல்ல ! மூன்று வேடம். மூன்றாவது வேடம!

பிரான்ஸ { க்கும் பிரிட்டன் வாக்குறுதி அளித்தது. "போரில் துருக்கிப் பேரரசு முறியடிக்கப்பட்டதும் அதன் ஆதிக்கத்தில் உள்ள பாலஸ்தனம் உட்பட அனைத்து நாடுகளையும் பிரான்ஸ { ம் பிரிட்டனும் பங்கு போட்டுக்கொள்ளலாம்".

போர் முடிந்தது. 1918ஆம் ஆண்டில், போரில் துருக்கி தோற்று சரண் அடைந்தது. துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த சிரியா நாட்டை பிரான்ஸ் ஆக்கிரமித்துக் கொண்டது. துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்த பாலஸ்தீனம், ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகளை பிரிட்டன் ஆக்கிரமித்தது.

அரபு மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதயைக் காற்றில் பறக்க விட்ட பிரிட்டன், பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றுவதில் தீவிரமாக இறங்கியது. இதையடுத்து பாலஸ்தீனத்தில் யூதரகளுக்குத் தனி நாடு அமைக்க அனுமதி கோரி ஐ.நா. சபையில் பிரிட்டனின் ஆதரவோடு யூதர்கள் மனுச் செய்தார்கள். இதை ஏற்று பாலஸ்தீன ததைத் துண்டு போடும் தீர்மானத்தை ஐ.நா.சபை நிறைவேற்றியது.

"பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு பகுதியில் யூத இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டை அமைத்துக் கொள்ளவேணடும். மறுபகுதியில் அரபு இனத்தவர் தங்களது சுதந்திர நாட்டை அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு நாடுகளுக்குமிடையில் குறுக்கிடும் சாலைகள், பகுதிகள் ஐ.நா.சபையின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும். பாலஸ்தீனத்தில் உளள புனித நகரான (முஸ்லீம்கள், யூதர்கள், கிறிஸ்துவர்கள ஆகியோரின் புனித நகரமான) ஜெருசலேம, ஐ.நா.சபையின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும்" என்று கூறிய அந்தத் தீர்மானம் ஐ.நா சபையின் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் 1947 நவம்பர் 29 ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் எதிர் த்து வாக்களித்தன.

யூதர்கள் தங்களுக்கு கிடைத்த பகுதிக்கு 'இஸ்ரேல்' என்று பெயர் சூட்டி, 1948 மே 14 இல் சுதந்திர நாடாக அறிவித்தார்கள். அரபு மக்கள் இதை ஏற்க மறுத்தார்கள். அன்று தொடங்கியது அரபு- இஸ்ரேல்யுத்தம.

### பாலஸ்தீன எதிர்ப்பு

1948, 1956, 1967, 1973 ஆகிய ஆண்டுகளில் கடும் யுத்தம் நடந்தது. அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் முழு உதவியுடன் போரிட்ட இஸ்ரேல், பாலஸ்தீனம் முழுவதையும் ஆக்கிரமித்து சிரியா, ஜோர்டான், லெபனான், எகிப்து ஆகிய நாடுகளின் பல்வேறு பகுதிகளையும் சேர்த்து ஆக்கிரமித்துக் கொணடது.

பின்னர் 1978 ஆம் ஆண்டில் எகிப்தும் இஸ்ரேலும் சமரசம் செய்து கொண்டதன் அடிப்படையில் எகிப்தின் சினாய் பகுதியை இஸ்ரேல் திருப்பிக் கொடுத்துவிட்டது. இதற்கிடையில் பாலஸ்தீனத்தை விட்டு லட்சக் கணக்கான பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் வெளி நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்து பரிதவித்து வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை இப்போது சுமார் 70 லட்சம். சுமார் 40 லட்சம பாலஸ்தீனியர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். சுமார் ஒரு லட்சம் பாலஸதீனியர்கள் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐ.நா.சபை 'ஆயிரத் தெட்டு' தீர்மானங்கள் போட்டது. தீர்மானங்கள் எல்லாம் பேப்பரில் மட்டுமே இருந்தன. இந்தச் சூழ்நிலையில் 1963 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது 'பாலஸ்தீன விடுதலை இயக்கம்'. 1969இல் யாசர் அராபத் இதன் தலைவரான பின்பு பிரமாணடமான போராட்டங்கள் நடந்தன. ஆயுதம் தாங்கிய போராட்டமாகவும், ஆயுதமற்ற போராட்டமாகவும பாலஸ்தீனத்திலும், வெளிநாடுகளிலும் வகைவகையான போராட்டங்கள் நடந்தன.

இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் பாலஸ்தீன விடுதலை இயக்கததை அங்கீகரித்தன. ஆனால், "பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்பது ஒரு பயங்கரவாத இயக்கம். அதை அழித்துவிட்டுத்தான் மறுவேலை" என்று அறிவித்துச் செயற்பட்டது இஸ்ரேல்! அதற்கு ஆதரவளித்தன, அமெரிக்காவும் பிரிட்டனும் மற்ற சில ஆதரவு நாடுகளும்.

மறுபுறம், "இஸ்ரேல் அரசு ஒரு சட்டவிரோத அரசு. அதை அழித்து விட்டுத்தான் மறுவேலை" என்று அறிவித்துச் செயற்பட்டது பாலஸ்தீன விடுதலை இயக்கம்.

இரண்டும் நடக்கவில்லை. மாறாக, பாலஸ்தீனியர்களும், மற்ற அராபியர்களும், இஸ்ரேலியர்களும் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டதுதான் மிச்சம். இதற்கிடையில் இஸ்ரேல் அரசுக்கும், பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தப் பல முயற்சிகள் நடந்தன. கடைசியில் 1993 ஆம் ஆண்டில் சமரச உடன்பாடு ஏற்பட்டது. முதல் முறையாக இஸ்ரேல் நாட்டையும், அரசையும் பாலஸ்தீன விடுதலை அமைப்பு அங்கீகரித்தது. அதேபோல் பாலஸ்தீன விடுதலை அமைப்பையும், பாலஸ்தீனத்தில் சுயாட்சி அதிகார அமைப்பையும் இஸ்ரேல் அரசு அங்கீகரித்தது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சமாதான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண கால வரம்புடன் கூடிய திட்டம் உருவாக்கப்பட்டது.

ஆனால் இதற்கு இஸ்ரேலிலும், பாலஸ்தீனத்திலும் தீவிரவாத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபின் இஸ்ரேலியத் தீவிரவாதயால் சுட்டுக் கொல்லப்பட்டார. பாலஸ்தீனத்தில் ஹமாஸ் என்னும் அமைப்பு செல்வாக்குப் பெற்றது. இப்போது பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதி பாலஸ்தீன வடுதலை அமைப்பின் கட்டுப்பாட்டிலும், காசா பகுதிஹமாஸ்அமைப்பின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.




சமீபத்தில் இஸரேலிய இளைஞர்கள் மூவர் கொல்லப்பட்டதைச் சாக்காக வைத்து, காசா பகுதியை சுடுகாடாககும் கொடூர நடவடிக்கைகளில் இப்போது இஸ்ரேல ராணுவம் ஈடுபட்டு வருகிறது. நாளதோறும படுகொலை செய்திகள்!!!

இரு தரப்பும் போர் நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று வழக்கம்போல ஐ.நா. சபைப் பொதுச் செயலாளரும, மற்ற பலரும் வேண்டுகோள் விடுத்துவருகிறார்கள். இந்தியா, ரஷ்யா, சீனா, பிரேசில், தென் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை உறுப்பினர்களாகக் கொணட பிரிக்ஸ் அமைப்பு 15, ஜூலை, 2014 அன்று இது தொடர்பாகத் தீர்மானம் நிறை வேற்றியுள்ளது. "இரு தரப்பும் பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும். 1967, ஜூன், 4 அன்று இருந்த எல்லைப் பகுதிகளைக் கொண்ட, கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனம் அமைக்கப்பட வேணடும் !!!." என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. *-இணையம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கும் அரசாங்கம்



## ரணில் குற்றச்சாட்டு

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கங்களின் கீழ் பலர் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

1994 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களின் முறைப்பாடுகளை பெற்று, அது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்து விளக்குவதற்காக கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

ராஜபக்ஷ அரசாங்கம் உயர்ந்த மட்டத்தில் அரசியல் பழிவாங்கலை ஆரம்பித்துள்ளது.

கலாநிதி ஷிராணி பண்டார நாயக்கவுக்கு மேற்கொண்ட அரசியல் பழிவாங்கல் எதிர்காலத்தில் அலுவலகத்தில் பணிபுரியும் எழுது வினைஞருக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுமா என்பதை கூற முடியாது.

திவிநெகும சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், முன்னாள் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க பழிவாங்கப்பட் டார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் அரசியல் எதிரிகள் மாத்திரமல்லாது அரசாங்கத்தில் இருக்கும், அரசாங்கத்திற்கு எதிரானவர்களும் இவ்வாறு அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவின் வாகனத்தை சில வாகனங்கள் துரத்திச் சென்றமை தொடர்பான தகவல்கள் வெளியாகின.

அந்த வாகனங்களின் இலக்கங்களை கொடுத்தும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அழுத்தங்களை மீறி செயற்பட்ட காரணத்தினால் கிராம்பே ஆனந்த தேரரின் தியசேன்புரவில் உள்ள விகாரை தாக்குதலுக்கு உள்ளானது.

அன்றைய தினமே பொறளையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. சில அடிப்படைவாத பௌத்த பிக்குகளின் செயல்களால் நாடு பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

சட்டம் , ஒழுங்கு அமைச்சு, மற்றும் பாதுகாப்பு அமைச்சு இருக்கும் நிலையில், பிரச்சினையுடன் சம்பந்தப்படாத வெளிவிவகார அமைச்சு தலையிட்டு பதில் வழங்கும் நிலைமையை காணக்கூடியதாகவுள்ளது.

இந்த அரசாங்கம், மிருக குணம் கொண்ட அரசாங்கம். இந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# பதவியை விட்டுச்செல்ல நான் தயாராகவே இருக்கின்றேன்

## பிரதமர் ஜயரட்ன



(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுமானாலும் பிரதமர் பதவியையும், புத்தசாசன அமைச்சர் பதவியையும் கைவிட்டுச் செல்ல தான் தயாராக இருப்பதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில், கடந்த காலங்களில் தன்னை பற்றி வெளியாகிய செய்திகள் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

உடம்பில் கொடி ஒன்றை போர்த்தி கொள்வது போலவே நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரதமர் பதவியையும், புத்தசாசன அமைச்சர் பதவியையும் விட்டுச் செல்ல தயாராகவே இருக்கின்றேன்.

பிரதமர் பதவிக்கோ, புத்த சாசன அமைச்சர் பதவிக்கோ வேறு ஒருவரை நியமிப்பது குறித்து என்னிடம் எந்த எதிர்ப்புமில்லை.

எனக்கு காது கேட்பத்தில் சிறிது குறைப்பாடு இருந்தாலும் முற்றாக காது செவிடாகவில்லை.

எனக்கு பார்வை நான்றாக தெரிவதுடன் எந்த வேலையாக இருந்தாலும் அதனை தனியே செய்து கொள்ளும் இயலுமையும் என்னிடம் இருக்கின்றது.

என்மீது தனிப்பட்ட ரீதியில் கோபம் கொண்டுள்ள சிலர், எனது குறைபாடுகள் பற்றி பேசுகின்றனர்.

ஒரு காலத்தில் அமெரிக்காவின் பிரதமர் ஒருவர் சக்கரநாற்காலில் நாடாளுமன்றத்திற்கு சென்றதாகவும் அது குறித்து அந்நாட்டில் எந்த ஊடகமும் செய்திகளை வெளியிடவில்லை எனவும் பிரதமர் டி.எம். ஜயரட்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

# விசா விண்ணப்பத்திற்கு புதிய திட்டம் அறிமுகம்

## பிரித்தானியா அறிவிப்பு

இலங்கையில் இருந்து பிரித்தானிய விசாவுக்கு விண்ணப்பிப்போருக்காக புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இது கடவுச்சீட்டை திரும்ப வழங்கும் சேவை என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது.

புதிய அறிமுகத்தின்படி விசாவுக்காக ஆவணங்களை சமர்ப்பிப்போர் விசா தயாரிப்பு நடைபெறும் பெரும்பாலான காலத்தில் தமது கடவுச்சீட்டை தம்வசம் வைத்திருக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்படி சுற்றுலா, வியாபாரம் உட்பட அடிக்கடி பிரித்தானியாவுக்கு சென்று திரும்புவோரும் இதில் உள்வாங்கப்படுவார்கள். இதேவேளை இந்த திட்டத்துக்காக 9 ஆயிரத்து400 ரூபா மேலதிக கட்டணமாக அறிவிடப்பட்டுள்ளது. (6)

# இன்று ஒரு தகவல்

## நடக்கலாமா?

காலையில் கடற்கரை ஓரமாக எல்லோரும் "வோக்கிங்" போய்க் கொண்டிருந்தார்கள். எதிரில் எனக்குத் தெரிந்த ஒருவர் வேகமாக வந்து கொண்டிருந்தார்.

"என்ன சேர்? வோக்கிங்கா?" என்று கேட்டேன். அவரால் பதில் சொல்லக் கூட முடியவில்லை. வேகமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். கொஞ்சம் நிதானித்து விட்டு "ஆமாம்" என்றார். என்ன சேர் இவ்வளவு வேகம்? என்றேன்.

"உங்களுடைய பேச்சைக் கேட்டுத் தான் நடக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் இன்று ஒரு தகவல் கேட்டேன். நடக்கிறது நல்லதென்று கூறியிருந்தீர்கள். அன்றிலி ருந்து நடக்க ஆரம்பித்தேன். ஆனாலும் சரியான கஷ்ட மாயிருக்கிறது. இப்பொழுது உங்களிடம் சுலபமாக பேசக் கூட முடியவில்லை. மூச்சு வாங்குகிறது. உடம்பு கூட வலிக்கிறது" என்றார்.

"உங்களை யார் இவ்வளவு வேகமாக நடக்கச் சொன்னது? வேகத்தைக் குறைத்து மெதுவாக நடவுங் கள்!" என்றேன். "நீங்கள் நடப்பதால் என்னென்ன நன்மைகள் உண்டு என்று கூறினீர்களே தவிர எப்படி நடப்பது? என்று கூறினீர்களா?" என்றார் அவர்.

இவர் சொல்வதிலும் நியாயம் உண்டு. அதனால் "வோக்கிங்" போகிறார்கள் கவனிக்க வேண்டிய சில முக்கியமான குறிப்புக்களை இன்று தெரிந்து கொள்ள லாம்.

உங்களுடைய வயது 40 க்கு மேலா? உங்களுடைய எடை இருக்க வேண்டியதை தவிர 10 கிலோ அதிகமாக உள்ளதா? இதய நோய், இரத்த நாளநோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற ஏதாவது நோய்கள் உள்ள வரா நீங்கள்?

அப்படியானால் உங்களுடைய இஷ்டத்துக்கு "வோக்" போக ஆரம்பிக்காதீர்கள். முதலில் ஒரு மருத்துவ பரிசோதனை செய்யுங்கள் அது தான் நல்லது. நடக்கும் பொழுதோ, உடற் பயிற்சி செய்யும் பொழுதோ மார்புப் பகுதியில் அல்லது வேறு எங்காவது தொடர்ந்து வலி இருந்தால் பயிற்சியை நிறுத்தி விட்டு மருத்துவரைப் போய் பாருங்கள்!

"வோக்" போகும் பொழுது உங்கள் சக்திக்கு தகுந்த மாதிரி மெதுவாக அதிக கஷ்டமில்லாமல் முன்னேறுங்கள். இடைஞ்சல் கொடுக்காத சப்பாத்து உடைகள் போன்றவற்றை உபயோகியுங்கள். பாதத்தில் ஆடு தசை யில் ஏதாவது பிரச்சினை இருந்தால் டாக்டரைப் பாருங்கள்.

வெயிலாக இருந்தாலும் பனியாக இருந்தாலும் தலையில் தொப்பி போட்டுக் கொள்ளுங்கள். உடற் பயிற்சிக்கு முன்னும் பின்னும் பயற்சி செய்யும் போது நிறைய தண்ணீர் குடியுங்கள்!

முதல் ஒரு மாதத்துக்கு கொஞ்சம் தளர்வாக... சாவ காசமாக நடக்கலாம். மணிக்கு 3 அல்லது 4 கிலோ மீற்றர் வேகத்தில் நடக்கலாம். அதன்பின்னர் வேகத்தை அதிகப்படுத்தலாம். மணிக்கு 6 அல்லது 8 கிலோ மீற்றர் அளவுக்கு நடக்கலாம். நடக்கும் போது நன்றாக கையை வீசிக் கொண்டு நடக்க வேண்டும். மூச்சுவிடும் எண்ணி க்கை அதிகரிக்க வேண்டும். இதுமாதிரி 30 நிமிடம் நடக்கலாம்.

தனியாக நடக்க ஒரு மாதிரியாக இருந்தால் குழுப்பாக போகலாம். நடப்பதை சந்தோசமான விடயமாக ஆக்கிக் கொள்ளுங்கள். சிலபேர் நடக்கும் பொழுது கடந்த காலத்தையோ, எதிர்காலத்தையோ அசை போட்டுக் கொண்டு போவார்கள். சிலபேர் முக்கியமான திட்டமெல் லாம் இப்படி நடக்கும் பொழுதுதான் தீர்மானிப்பார்கள்.

நடக்கும் பொழுது மன இறுக்கம் குறையும். பரபரப்பு குறையும். மன ஆற்றல் பெருகும். தன்னம்பிக்கை வளரும். முதுமை தள்ளிப் போகும். செயல்திறன் அதிகரிக்கும். இதைத் தவிர உடலுக்கு பலவித நன்மைகள் ஏற்படும்.

அதனால் இதுவரைக்கும் நடக்க ஆரம்பிக்காதவர்கள் இன்று கூறிய தகவலில் உள்ள குறிப்புக்களை கவனத்தில் கொண்டு நடக்க ஆரம்பிக்கலாம். சாள்ஸ்லேம்ப் ஒரு ஆங்கில இலக்கிய மேதை. அவர் ஒரு நாள் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனாராம். டாக்டர் அவரை பார்த்துவிட்டு " நீங்கள் தினமும் வெறும் வயிற்றில் நடக்க வேண்டும்!" என்றாராம்.

"வெறும் வயிற்றில் நடப்பதற்கு நான் தயார்... ஆனால் வயிறு கிடைக்க வேண்டு மே! யார் வயிற்றில் நடக்கிறது டாக்டர்?" என்று கேட்டாராம் இவர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரீச்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன்கருதி

# தடையற்ற மின் விநியோகத்தை மன்னாரில் வழங்க கோரிக்கை

## சத்தியேந்திரா மின்சாரசபையிடம் விடுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடரும் சீரற்ற மின் விநியோகம் குறித்து அண்மையில் அங்கு சென்றிருந்த ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைவர் எஸ். சத்தியேந்திரா விசனம் தெரிவித்துள்ளதோடு, தற்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி, சீரான மின்விநியோகத்துக்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு, இலங்கை மின்சார சபையின் மன்னார் பிராந்திய முகாமையாளரிடம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சத்தியேந்திரவை சந்தித்து, அடிக்கடி ஏற்படும் மின் தடையினால் தங்களது கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது பற்றியும், பரீட்சைகள் நடைபெறும் நாட்களிலாவது மின்சாரம் தடை யின்றி விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்களின் கோரிக்கையை அடுத்து உடனடியாக, இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பிரதி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு தற்போது உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி, மன்னாரின் மின்சார விநியோகத்தை உடனடியாக வழமை நிலைமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்த கோரிக்கையை ஏற்று திருத்த வேலைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் பரீட்சைகள் தொடரும் நிலையில், ஓரிரு தினங்களில் மீண்டும் அங்கு மின்வெட்டு இடம் பெற ஆரம்பித்திருப்பதாக மன்னார் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டு வரும் சத்தியேந்திரா தெரிவித்தார்.

இவ்வாறு சீரற்ற மின்விநியோக நிலை தொடர்வதால் இரவு நேரங்களில், பெண்கள் அவசரத் தேவைகளுக்காக வெளியில் செலல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகவும் சீரற்ற மின் விநியோகத்தால் மிக நீண்ட காலமாக பாதிக்கப்பட்டிருக்கும் மன்னார் மக்களின் நலன் கருதியும் உடனடியாக இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் சத்தியேந்திரா மேலும் வலியுறுத்தியுள்ளார். (6)

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர் விடுதலை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணேசலிங்கம் திலீப் என்பவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். நேற்று நீதிமன்றில் ஆஜரான பயங்கரவாத தடுப்புச் சட்ட பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தாம் இச்சந்தேகநபர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்ததாகவும், இச்சந்தேகநபர் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதற்கான சான்றுகள் எதுவும் இல்லாத காரணத்தினால் சந்தேகநபரை விடுதலை செய்வதற்கு எவ்வித ஆட் சேபனையும் தெரிவிக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார்கள். இதன் பிரகாரம் நீதிபதி இச்சந்தேகநபரை விடுதலை செய்தார்.

இச்சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி பரஞ்சோதி மற்றும் சுபா விதுரன் ஆகியோர் ஆஜராகி இருந்தனர். சந்தேக நபர் கடந்த 5 ஆம் மாதம் 7 ஆம் திகதி முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




# ஒட்டுசுட்டானில் சமுர்த்தி பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறையில்

## பிரதிச் செயலாளர் தகவல்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி திட்டப்பயனாளிகளுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் இவை ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாகவும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச்செயலாளர் எஸ்.குருபரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமுர்த்தி பயனாளிகள் 143 பேருக்கு ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாக 35 இலட்சத்து75 ஆயிரம் ரூபா கடனும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாக 156 பேருக்கு 37 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 299 பேருக்கு 72 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியினைப்பெற்ற பயனாளிகள் வாழ்வாதாரத்திற்கு வழி சமைக்கும் தொழில்களில் முதலீடு செய்து முன்னேறி வருகின்றனர்.

அத்துடன் சமூக பாதுகாப்பிலும் சமுர்த்தி உதவித்திட்டம் பெறுவோருக்கு பல பொது சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாக மரணக்கொடை தலா 10 ஆயிரம் ரூபா 7 பேருக்கும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாக 4பேருக்குமாக மொத்தம் 11பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருமணக்கொடையாக தலா 5 ஆயிரம் ரூபா ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாக 10 பேருக்கும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாக 5 பேருக்குமாக மொத்தம் 15 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மகப்பேற்று உதவிக்கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபா ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாக 19 பேருக்கும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாக 7 பேருக்குமாக மொத்தம் 26 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருத்துவ சிகிச்சைகளுக்காக ஒரு நாளைக்கு 200 ரூபா வீதம் ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி ஊடாக 19 பேருக்கும் மாங்குளம் சமுர்த்தி வங்கி ஊடாக 5 பேருக்குமாக மொத்தம் 24 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சமுர்த்தி உதவி பெறும் மாணவர் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் சிப்தொற புலமைப் பரிசில் திட்டம் மூலம் கடந்த 2011 இல் மாங்குளம் மற்றும் ஒட்டு சுட்டான் சமுர்த்தி வங்கிகள் ஊடாக 42 மாணவர்களுக்கும் 2012 ஆம் ஆண்டில் இதே வங்கிகளின் ஊடாக 60 மாணவர்களுக்கும் 2013 இல் 51 மாணவர்களுக்குமாக மொத்தம் 153 மாணவர்களுக்கு கடந்த ஆண்டு வரை சிப்தொற புலமைப்பரிசில் வழங்க ப்பட்டதாகவும் இவ்வாண்டிற்கான செயற்றிட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (6-15)

# கற்பகதரு சங்கங்கள் அமைக்கப்படவுள்ளன

(கிளிநொச்சி)

தென்னை பயிர்ச் செய்கை அதிகார சபையால் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் கற்பகதரு சங்கங்கள் அமைக்கப்பட உள்ளதாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரா தெரிவித்தார். கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரனின் வழிகாட்டலில் இந்த சங்கங்கள் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் 42 கிராம அலுவலர் பிரிவுகளிலும் அமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வன்னேரிக்குளம் பொதுநோக்கு மண்டபத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு ஆனைவிழுந்தான்குளம் பொது நோக்கு மண்டபத்திலும் முற்பகல் 11.30 மணிக்கு கண்ணகைபுரம் பொது நோக்கு மண்டபத் திலும் பிற்பகல் 1.30 மணிக்கு அக்கராயன்குளம் மக்களுக்கு கெங்காதரன்குடியிருப்பிலும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்கந்தபுரம் மக்களுக்கு முருகன் கோவிலிலும் நடைபெறவுள்ளது.

12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோணாவில் பொதுநோக்கு மண்டபத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு ஊற்றுப்புலம் சேவைநிலையத்திலும், முற்பகல் 11.30 மணிக்கு புதுமுறிப்பு கிராம அலுவலர் அலுவலகத்திலும், பிற்பகல் 1.30 மணிக்கு செல்வாநகர் பொதுநோக்கு மண்டபத்திலும், பிற்பகல் 3 மணிக்கு அம்பாள்குளம் மீள்எழுச்சி மண்டபத்திலும், நடைபெறவுள்ளது.

18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விவேகானந்தநகர் பொது நோக்கு மண்டபத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு கிருஸ்ணபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் முற்பகல் 11.30 மணிக்கு மலையாளபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும், பிற்பகல் 1.30 மணிக்கு பாரதிபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும், பிற்பகல் 3 மணிக்கு பொன்னகர் மத்தி பொதுநோக்கு மண்டபத்திலும், நடைபெற உள்ளது.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உதயநகர் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு உதயநகர் மேற்கு பொதுநோக்கு மண்டபத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு கனகபுரம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும், பிற்பகல் 1.30 மணிக்கு ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளியிலும், பிற்பகல் 3 மணிக்கு தொண்டமான் நகர் பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெற உள்ளது.

தென்னை பயிர்ச்செய்கையை கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மேம்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வெளிக்கள அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் ஆகியோரது பங்களிப்புடன் கற்பகதரு சங்கம் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-254)

# வீட்டுத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கடும் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தால் அழிவடைந்த வீடுகளுக்கான கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியன் வீட்டுத் திட்டத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய உரிய அதிகாரிகள் தட்டிக்கழிப்புடன் செயற்படுகின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதில் வயோதிபர், கணவனால் கைவிடப்பட்ட பெண், தாமாக பகுதி வேலைகளை முடித்தவர்கள் என பலதரப்பட்டவர்களே இவ்வாறு தட்டிக்கழிக்கப்படுகின்றனர்.

ஆனால் இம் மாவட்டத்தில் எந்தவொரு கஷ்டத்தையும் அனுபவிக்காத சொந்த மண்ணை விட்டு வெளி மாவட்டங்களில் இருக்கும் மக்கள் தமது காணிகளை வந்து



பார்த்துவிட்டு வீட்டுத் திட்டங்களுக்கு பதிந்து விட்டு செல்கின்றனர்.

அவர்கள் பதிந்து சென்று ஒரு மாத காலப் பகுதியில் அந்த மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வீட்டுத் திட்ட வசதி மற்றும் வேறு கொடுப்பனவுகள என்பனவும் வழங்கப்படுகிறன.

இவ்வாறான செயற்பாடுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் துன்பத்தில் வாழும் எமக்கு மிகுந்த போதனையாகவுள்ளது என பாதிக்கப்பட்ட மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் வடமாகாண சபையினர் என பலரும் கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்ட எமக்கு வீட்டுத் திட்ட உதவி மற்றும் பகுதிச் சேத கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு உதவி செய்ய வேண்டும் என மக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (6-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி பாவனைக்கு நெல்லியடி பொலிஸார் அனுமதி

(கரணவாய்)


வடமராட்சி பகுதியில் கோவில்களில் ஒலி பெருக்கி பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தினை நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கோவில் நிர்வாக சபையினருக்கு வழங்கியுள்ளனர்.

இவ் அனுமதிப் பத்திரத்தில் கோவில் உற்சவ காலங்களில் காலை 5 மணி தொடக்கம் 8 மணி வரையும் மாலை 5 மணி தொடக்கம் 10 மணிவரையும் சமய நிகழ்வுகளுக்கு மட்டும் ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் உற்சவ காலங்களில் இசைக்கச்சேரி நடத்துவதற்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தற்போது க.பொ.த.உயர்தரம் மற்றும் தரம்-05 புலமைப்பரீட்சை நடைபெறுவதால் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு இரவு 10 மணிக்கு மேல் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி கொடுக்கவில்லை.

இக்காலங்களில் ஒலிபெருக்கி சட்டங்களை மீறி அனுமதி இல்லாமல் பாவிப்பதால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாவிக்கப்படும் ஒலிபெருக்கிகள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்படும்.

கோவில் சமய நிகழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரத்தின் கட்டளைகளை மீறும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என நெல்லியடி பொறுப்பதிகாரி தெரிவித்தார். (6-60)




# தமிழ் மன்னர்களின் சிலைகள் மாநகர சபையினரால் திறப்பு

யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களின் சிறப்பினையும் அவர்கள்தம் பெருமையினையும் எடுத்தியம்பும் பொருட்டு தமிழ் மன்னர்களின் சிலைகளை அமைப்பதற்கு மாநகரசபை ஏற்பாடு செய்துள்ளது.

இச்சிலைகள்திறப்பு விழா யாழ்.மாநகர முதல்வர்திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.மணிக்கூட்டுக்கோபுர சுற்றுவட்டப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பிக்கவுள்ளதோடு சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதியும் வரலாற்று பேராசிரியர் எஸ்.சத்தியசீலனின் வரலாற்று உரையும் இடம் பெறும்.

இச்சிலை திறப்பு விழாவின் போது யாழ்ப்பாண இராச்சியத்தில் தமிழ் வரலாற்றையும், பாரம்பரியத்தை யும் நிலைநாட்டி ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களான எல்லாளன், பண்டார வன்னியன், பரராசசேகரன் ஆகியோரின் சிலைகள் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.


தமிழரின் பெருமைகளை எடுத்தியம்பும் இம்மன்னர்களின்சிலை திறப்பு விழாவிற்கு அனைத்து மக்களையும் திரண்டு வருமாறு யாழ்.மாநகர முதல்வர் அழைப்பு விடுத்துள்ளார். (6)

# 238 பேர் கடந்த ஒரு வாரத்தில் கைது; மாவட்டத்தில் அதிகரிக்கும் குற்றச்செயல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட 238 பேர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

பிறரை அடித்து காயப்படுத்திய 36 பேரும் பாரிய குற்றச் செயல்களுடன் ஈடுபட்ட 10 பேரும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட 8 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 30 பேரும் சந்தேகத்தின் பேரில் 38 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 3 பேரும் கலகம் விளைவித்த 4 பேரும் அனுமதியின்றி மதுவிற்பனை செய்த 5 பேரும் வீதி விபத்தினை ஏற்படுத்திய 5 பேரும் திருட்டில் ஈடுபட்ட ஒருவரும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஒருவரும் வீட்டினுள் அத்துமீறி உள் நுழைந்த 10 பேரும் பொது இடத்தில் மது அருந்திய 7 பேரும் சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்ட ஒருவரும் ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 78 பேருமாக மொத்தம் 237 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் சரணடைந்தும் உள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (6-4)



யாழ்.கோட்டை முனீஸ்வரன் தேர்த்திருவிழா அண்மையில் இடம் பெற்றபோது

# வாள் வெட்டுக் குழுக்கள் இருவாரத்திற்குள் அடக்கப்படும்

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திடசங்கற்பம்

இரண்டுவாரங்களுக்குள் யாழ்.மாவட்டத்தில் உள்ள வாள் வெட்டுக்குக் குழுக்கள் கைது செய்யப்படுவர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி. விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது குழுமோதல்கள் மற்றும் வாள் வெட்டுக் குழுக்களின் அடாவடித்தனம் மீண்டும் அதிகரித்துள்ளது.

இவர்கள் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற வாள்களினையும் தம்மிடம் வைத்துள்ளனர்.

இந்நபர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியமாக தகவல் வழங்குவதன் மூலம் இவர்களை கைது செய்ய முடியும்.

இவ் வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசேட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் இரு வர்ர காலப்பகுதிக்குள் அனைத்து வாள் வெட்டு குழுக்களும் அடக்கப்படும். அத்தோடு தொடர்புடையவர்களும் கைது செய்யப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (6-4)




# போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன

சமஸ்கிருத விற்பன்னர் அச்சுவேலி ச.குமாரசுவாமிக் குருக்கள் நினைவாக இந்துக் குருமார் அமைப்பினர் அச்சுவேலிப் பிரதேச மாணவரிடையே நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்திய சைவ நெறித் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் **கீழ்ப்பிரிவில்** முதலாம் இடம் பிரேமச்சந்திரன் சேயோன் (அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை), இரண்டாம் இடம்-சுவேந்திரன் கோபிகா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), பிரபாகரன் சானுகா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

**மத்திய பிரிவில** முதலாம் இடம் அம்சனா குரூஸ் (அச்சுவேலி மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்-திருச்செல்வம் ரிசானி (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), கிருஷ்ணராஜா சஞ்சீவன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

**மேற்பிரிவில்** முதலாம் இடம்-சாருஜா தூயமணி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - மாதங்கி சச்சிதானந்தம் (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாம் இடம் - சிவகுமார் லதுசன் (அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகிய மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவத்தின் போது இடம்பெறவுள்ளதாக இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ.கு.வை.கா.வைத்தீஸ்வரக்குருக்கள் தெரிவித்தார். (6)

# ஆடிவேல் வீதியுலா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடிவேல் வீதியுலா நாளை மறுதினம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை, மறுநாள் செவ்வாய்க்கிழமை, 13 ஆம் திகதி புதன் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய, இவ்வீதியுலா 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக 11 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தை சென்றடையும்.

அங்கிருந்து 2 மணிக்கு ஆரம்பமாகி யாழ்.நகர் வீதியூடாக வண்ணார் பண்ணை சிவன் கோவிலை சென்றடையும்.

12 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை அங்கிருந்து புறப்பட்டு காலை 9.30 மணிக்கு காங்கேசன்துறைவீதி ஊடாக நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் ஆலயத்தை வந்தடையும்.

அங்கிருந்து பிற்பகல் 4 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை சென்றடையும்.

13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை நண்பகல் 12 மணிக்கு வந்தடையும்.

மாலை 4.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக இரவு 7 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். (6)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட

# மதுபானசாலைகளை உடனடியாக மாற்றுமாறு உறுப்பினர் கோரிக்கை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள மதுபானசாலைகளை உடனடியாக அகற்றுமாறு கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இதுவரை ஆறு மதுபானசாலைகள் இயங்கி வருகின்றன.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையங்களுக்கு அனுமதி கொடுக்கின்ற சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் சிந்திக்காமல் இருப்பதும் இவர்கள் இவ் அனுமதியினை வழங்குவதன் மூலம் சமுதாயச் சீர்கேடுகள், குடும்ப வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற விடயங்கள் அதிகரித்துச் செல்வதை உணராமல் இருப்பதும் மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

இந்த மதுபான சாலைகளின் அபிவிருத்தியின் மூலம் எம் மக்களுடைய கலை, கலாசாரப் பண்பாடுகள் யாவும் அழிந்து கொண்டு செல்கின்றன.

ஆன்மீகத்தின் பற்றுதல் குறைந்து கொண்டு செல்கின்றது. இவற்றை அதிகாரிகள் உணர்ந்துகொள்ள மாட்டார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இவ் அபிவிருத்தியின் மூலம் தெரு ஓரங்களில் சாராயப் போத்தல்கள், பியர் ரின்கள் போன்றவற்றை தாராளமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலைமை மக்களுக்கு தேவை தானா? எமது பிரதேசத்தில் மதுபானசாலைகள் அதிகரித்துச் செல்வது ஒரு கீழ்த்தரமான செயலாகும்.

எனவேதான் இப் பிரதேசத்தில் உள்ள மதுபானசாலைகளை அகற்றுவதற்கு ஏற்ற பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். இதன் மூலம் மது போதைப் பொருள் பாவனையற்ற சமுதாயம் உருவாகுமென அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஸா தாக்குதல் குறித்து

# பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை ஐ.நா.சபை முன்மொழிய வேண்டுமாம்

### பான் கீ மூனுக்கு முஸ்லிம்கள் கடிதம்

ஐக்கிய நாடுகள் சபை காஸா தாக்குதல் விடயத்தில் பக்கசார்பற்ற முறையில் சர்வதேச விசாரணையை முன்மொழிய வேண்டும் என ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் காஸாமீது இஸ்ரேல் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் மனிதாபிமானமுள்ள அனைவராலும் மிகவும் கண்டிக்கத்தக்க, துக்ககரமான நிகழ்வாகும்.

இலங்கைக்கு எதிரான விடயத்தில் கைகோர்த்துச் செயற்பட்ட மேற்குலக நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் பலஸ்தீன் விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக இஸ்ரேலுக்கு ஆதரவாக செயற்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் பல நாடுகள் காஸா தாக்குதல் விடயத்தில் நடுநிலமை வகிக்கத்தவறியதுடன், நியாயத்தை கூறாது மௌனமாக இருக்கின்றன.

சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களும் காஸா தாக்குதல்களுக்கு எதிராக பலமான அழுத்தங்களை இஸ்ரேல் மீது பிரயோகிக்கவில்லை.

இத்தகைய செயற்பாடுகள் மனித நேயத்திற்கும், மனிதவுரிமைக்கும் மதிப்பளிக்காது முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுவதையே காட்டுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையானது காஸா தாக்குதல் விடயத்தினை மனிதாபிமானத்துடன் நடுநிலையாக நோக்க வேண்டும் என வினயமாக வேண்டிக்கொள்கின்றோம்.

தாக்குதல் நடவடிக்கையானது முஸ்லிம்களின் புனித மாதமாகிய நோன்பு காலத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது மிகவும் கண் டிக்கத்தக்கதும் மதச் சுதந்திரத்தை மீறும் செயலாகவும் உள்ளது.

தாக்குதலின்போது குடிமனைகள், அகதிமுகாம், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றின் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் குழந்தைகள், பெண்கள், அப்பாவிப் பொதுமக்கள் என்ற ரீதியில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பல ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளதுடன் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த நேரத்திலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மொத்தத்தில் காஸா தாக்குதலானது முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது. இன ரீதியான தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் சபை அனுமதிக்கக் கூடாது.

பலஸ்தீன் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய பணியாகும்.

எனவே உலக மக்களுக்கு உரிய பாதுகாப்பையும், உரிமைகளையும் பெற்றுத்தரவேண்டிய மேலாதிக்கமுள்ள சபையாகத் திகழும் ஐக்கிய நாடுகள் சபையானது காஸா தாக்குதல் விடயத்தில் பக்கச்சார்பற்ற முறையில்சர்வதேச விசாரணையை முன்மொழிய வேண்டும் எனக் கோரிக்கை விடுகின்றோம். (6)

# மருத்துவமனையை அடைய ஆற்றில் நீந்திக் கடந்த 9 மாத கர்ப்பிணிப் பெண்



கர்நாடக மாநிலத்தில் கிராமம் ஒன்றில் மருத்துவ வசதி இல்லாததால், ஒன்பது மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர், மருத்துவமனையை அடைய, கிருஷ்ணா நதியை நீந்தி கடந்திருக்கிறார்.

எல்லாவா என்ற இந்த 22 வயதுப் பெண், கர்நாடகா மாநிலத்தின் தலைநகர் பெங்களூரின் வடக்கே சுமார் 400 கிமீ தொலைவில் உள்ள யாட்கிர் மாவட்டத்தில் அமைந்திருக்கும், நீலகந்தராயன்கடே என்ற தீவுக் கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர்.

இந்தப் பெண்ணுக்கு நீச்சல் தெரியாது. ஊரில் மருத்துவ வசதி இல்லை. அருகில் மருத்துவமனை இருக்கும் இடம் ஆற்றுக்கு அப்பால் இருக்கிறது.

ஆறு சூழ்ந்த தீவாக இருக்கும் இந்த கிராமத்தில் இருந்து ஆற்றைக்கடந்து செல்ல ஒரு மர மிதவைதான் இருக்கிறது.

அது ஆறு பெருக்கெடுத்து சீற்றத்துடன் ஓடும் காலங்களில் இயங்குவதில்லை.

இந்த நிலையில், வீட்டில் பிள்ளை பெறக்கூடாது, மருத்துவமனையிலேதான் தனது பிரசவம் நடக்க வேண்டும் என்ற உறுதியுடன், இவர் , காய்ந்த பூசணிக்காய்கள் மற்றும் சுரைக்காய்கள் போன்ற காய்களை மிதவைகளாக தனது உடலைச் சுற்றிக் கட்டிக்கொண்டு, ஆற்றை கடக்க துணிந்திருக்கிறார்.

இவரது தந்தை, சகோதரர், லக்ஷமணன் மற்றும் உறவினர்கள் சிலர் இவருடன் முன்னும் பின்னும் பாதுகாப்பாக ஆற்றில் நீந்தியிருக்கின்றனர்.

முன்னே அவரது சகோதர் நீந்திச் செல்ல, அவரது பிற உறவினர்கள் அவரது பின்னால் சென்றிருக்கின்றனர். உலர்ந்த பூசணிக்காயை ஒரு கயிற்றால் பிணைத்து, அந்தக் கயிறை சகோதரர் பிடித்துக்கொள்ள, காய்களை இவர் பற்றிக்கொண்டு நீந்தியிருக்கிறார். (6)

# ஆஸியில் புகலிடம் கோரிய சிங்களவர்கள் உணவு தவிர்ப்பு

அவுஸ்திரேலியாவின் கேர்ட்டின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிங்கள புகலிட கோரிக்கையாளர்களில் 12 பேர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது அகதி அந்தஸ்து கோரிக்கை நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டு வருவதை எதிர்த்தே இந்த போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

13 சிங்கள புகலிட கோரிக்கையாளர்கள் வெளியில் இருப்பதுடன் 21 சிங்கள புகலிட கோரிக்கையாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாக கேர்டின் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரத்துவ கால தாமதம் செயலாக்கம் தொடர்பாக அதிர்ச்சி அளிக்கின்றது எனவும், அகதிகள் கட்டாய தடுப்பில் வைக்கப்பட்டிருப்பது அநீதியானது எனவும் அகதிகளுக்கான அமைப்பொன்று தெரிவித்துள்ளது.


அகதி அந்தஸ்து கோருவோரின் பாதுகாப்பை உறுதி செய்ய தக்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து விளக்கமளிக்க அதிகாரிகள் தவறி விட்டனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (6)

# ஈராக் மீது தாக்குதல் நடத்துமாறு உத்தரவிட்டார் ஜனாதிபதி ஒபாமா

வடக்கு ஈராக்கில் செயற்பட்டு வரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்த, தான் உத்தர விட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நலன்களுக்கு பாதிப்பு ஏற்பட்டாலோ, மதச் சிறுபான்மையினர் கொல்லப்படுவதைத் தடுப்பதற்காகவோ இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஈராக்கிற்கு மீண்டும் அமெரிக்கப் படைகளை அனுப்பும் உத்தேசமில்லை என்றும் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.



ஐஎஸ் குழு தீவிரவாதிகளால் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் பகுதிகளில் அமெரிக்கா ஏற்கனவே மனிதாபிமான ரீதியில் விமானத்திலிருந்து பொருட்களை வீசிவருகிறது.

ஈராக்கில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் காரகோஷை ஐஎஸ் குழு பிடித்ததையடுத்து அங்கிருக்கும் பொதுமக்கள் பெருமளவில் வெளியேறிவருகிறார்கள்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலையில், தனது பாதுகாப்பு ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு, வெள்ளை மாளிகையில் பேசிய ஒபாமா, மவுண்ட் சின்ஜார் பகுதியில் சிக்கியிருக்கும் யாஸிதி சமூகத்தினருக்கு அமெரிக்க இராணுவ விமானங்கள், உணவையும் தண்ணீரையும் வீசியிருப்பதாகக் குறிப்பிட்டார். (6)

# தமிழர்களை தூக்குமேடையில் ஏற்ற துடிப்பதா?

### ராமதாஸ் கண்டனம்

3 அப்பாவித் தமிழர்களை மீண்டும் தூக்கு மேடையில் ஏற்றத் துடிப்பதா? என்று ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு விட்ட நிலையில், பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூன்று தமிழர்களும் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

இந்நேரத்தில் அவர்களுக்கு மீணடும் தூக்கு தண்டனை பெற் றுத்தர வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

மத்திய அரசின் இந்த முடிவு உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் இதயங்களில் ஈட்டியாக பாய்கிறது.

சிறைக்கொட்டடியில் 24 ஆண்டுகளாக கடுமையான மன உளைச்சலுடன் வாடிக்கொண்டிருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவருக்கும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எந்த தொடர்பும் இல்லை என்பது மனச்சாட்சியுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியும்.

தடா சட்டத்தின்படி, பேரறிவாளன் உள்ளிட்ட மூவரையும் சித்திரவதை செய்தும், மிரட்டியும் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் தான் அவர்களுக்கு தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.

பேரறிவாளன் கொடுத்த வாக்குமூலத்தை திரித்து பதிவு செய்ததாக இந்த வழக்கின் விசாரணை அதிகாரிகளில் ஒருவரான தியாகராஜன் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

திரித்து பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் தான் பேரறிவாளனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

இது அனைவரும் அறிந்த உண்மையாகும். அவ்வாறு இருக்கும் போது உச்ச நீதிமன்றத்தால் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்ட மூவரையும் மீண்டும் தூக்கு மேடையில் ஏற்றத் துடிப்பது எந்த வகையில் நியாயம்? எனத் தெரியவில்லை.

வழக்கின் தகுதியைத் தாண்டி பார்த்தாலும், பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரின் கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் குடியரசுத் தலைவரும், மத்திய அரசும் நியாயமற்ற வகையில் 11 ஆண்டுகள் காலதாமதம் செய்தது இயற்கை நீதிக்கு எதிரானது என்று கூறித்தான் அவர்களின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்தது என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# இலங்கை பிரச்சினைக்கு சுமுக தீர்வு காணப்படும்

### இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

இலங்கையுடனுள்ள உணர்வோடு தொடர்பான பிரச்சினைகளை கவனிப்பதற்கு பொருத்தமான வழி வகைகள் பயன்படுத்தப்படுமென இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ எனும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தினால், தென்னிந்தியாவிலுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேல் உதவி தூதரகங்கள் தாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திலுள்ள பாகிஸ்தானிய இராஜதந்திரவாதி ஒருவர் இத்தீவிரவாத திட்டத்தில் ஈடுபட்டுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சு மேற்கணட அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும இடையிலான பிரச்சினைகளை கவனத்திலெடுக்க எத்தனையோ வழிகள் உள்ளன. அவை எப்போதும் பகிரங்கமானதாக இருக்க வேண்டும் என்றில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இராஜதந்திரிகள் எப்போதும் முன்கதவுகளை பயன்படுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது பாதுகாப்புடன் மேலும் மோதும் உணர்வுபூர்வமான பிரச்சினைகள் இருப்பின் அவை உரிய வழியில் கவனிக்கப்படும் என்பதை நான் உறுதிசெய்கின்றேன் என அவர் கூறியுள்ளார்.

இந்த பிரச்சினை பற்றிய செய்திகள் வெளிவந்த பின்னர், கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திலிருந்த மேற்படி இராஜதந்திரியை பாகிஸ்தான் சத்தமின்றி திரும்ப அழைத்துவிட்டதாக தெரிவிக்கின்றது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயைதொடக்கத்திலேயேகுணப்படுத்துங்கள். கடனை சிறியதாக இருக்கும்பொழுதே செலுத்தி விடுங்கள். ~ கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வீஷ்மர்களாக இருக்கலாம் ஆசி பாண்டவர்களுக்காகட்டும்

மகாபாரதம், இராமாயணம் என்பன மிகப் பெரும் இதிகாசங்கள். மனித குலம் தன்னை அற நெறிப்படுத்தி வாழ்வதற்காக வகுக்கப்பட்ட இவ்விரு இதிகாசங்களும் மாணவர்கள் கட்டாயமாகப் படிக்கவேண்டியவை.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதையும் எப்படி வாழக் கூடாது என்பதையும் முன்வைத்து அதர்மம் அழிவதனையும் தர்மம் வெல்வதனையும் எடுத்தியம்பும் இவ்விரு இதிகாசங்களையும் படிக்கும் போது இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றத்தின் காரணங்களும் அதில் மனிதன் எங்ஙனம் வாழ வேண்டும் என்ற வழிமுறைகளும் தெளிவாகப் புரியும்.

இருந்தும் சம காலத்தில் எங்கள் இளம் பிள்ளைகளுக்கு இதிகாசங்களை படிக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்பாடுகளும் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் போனதன் விளைவாக எங்கள் இளைஞர்களிடம் அறம் பற்றிய சிந்தனைகளும் அடிபட்டுப் போயின.

முன்பெல்லாம் எங்கள் தமிழ்ப் பண்பாட்டில் மகாபாரத, இராமாயணம் என்ற இதிகாசங்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் ஏராளம். அந்த இதிகாசங்களைப் படிப்பதன் மூலமாக அதர்மத்திற்கு எதிராகவும் தர்மத்திற்கு ஆதரவாகவும் செயற்படும் மனநிலை நம்மை அறியாமலே ஏற்படும்.

அதிலும் அதர்மத்தின் பக்கத்தில் நிற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் தர்மத்திற்கே எங்கள் ஆதரவு இருக்க வேண்டும். என்பதை பாரதத்தில் வரக் கூடிய வீஷ்மாச்சாரியாரின் கதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

துரியோதனன் செய்கின்ற அதர்மங்கள் அனைத்தும் வீஷ்மாச்சாரி அறியாதவர் அல்ல. இருந்தும் அதனைத் தடுக்கின்ற வல்லமை அவரிடம் இருக்கவில்லை. இவ்வாறு நாம் கூறும் போது அது எப்படி என்று நீங்கள் கேட்கலாம். வீஷ்மாச்சாரியார் மட்டுமல்ல இந்த நாட்டில் இருக்கக் கூடிய பலருக்கு அதர்மம் பற்றி நன்கு தெரியும். ஆனாலும் தலையாட்ட வேண்டிய தேவை உண்டு. தலையாட்டத் தவறினால் அதர்மம் அதனையும் தகர்த்து விடும் என்ற உண்மைகள் தெரிந்ததன் காரணமாக அப்படி ஒரு நிலைமை ஏற்படுவது இயல்பே.

எனவே அவ்வாறான நிலைமைகளில் வீஷ்மர் போல் பேசாமல் இருப்பதைத் தவிர வேறுவழியில்லை எனலாம்.

ஆனாலும் இங்கு ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். அதாவது வீஷ்மர் துரியோதனனுடைய சேனைத் தளபதியாக இருந்து குருஷேத்திரத்தில் பாண்டவருக்கு எதிராக போரிட்டாலும் அவரின் உள்ளம் எல்லாம் பாண்டவரின் வெற்றிக்கான பிரார்த்தனையாகவே இருந்தது.

இங்குதான் வீஷ்மரின் தர்ம நியாயம் வெளிப்படுகின்றது. அதாவது துரியோதனன் செய்வது அதர்மம் என்று தெரிகிறது.

அந்த அதர்மத்தை எடுத்தியம்பி துரியோதனைத் தடுக்க முடியாது என்பதும் தெரிகின்றது. இந்நிலையில் சேனைத் தளபதியாக ஏற்ற பொறுப்பை செய்து தன் உயிரை முடித்து இதுகாறும் மௌனமாக இருந்த குற்றத்திற்காக நியாயம் தேடிக் கொள்கிறார் வீஷ்மர்.

அதேசமயம் துரியோதனை நீ அதர்மத்தின் வழியில் வேகமாகச் சென்றபோதெல்லாம் உன்னைத் தடுக்கும் வல்லமை எனக்கில்லை. கூடவே நான் தடுத்தாலும் நீ கேட்கப் போவதுமில்லை.

ஆனால் நான் உனக்காக–உன்னைக் காப்பாற்றுவதற்காக என்னுயிரை தியாகம் செய்த பின்பாவது தர்மமே வெல்லும் என்ற உண்மையை அறி என்று உணர்த்தியவர் பிதாமகர் வீஷ்மர்.

அது மட்டுமல்ல போர்க்களத்தில் என்பிரிவுக்கு பின்னர் எனது ஆசியும் சேர்ந்து பாண்டவர்களை வெல்ல வைக்கும் என்பதையும் வீஷ்மர் மறைமுகமாக உணர்த்துகின்றார்.

எனவே வீஷ்மர் போல துரியோதனன் பக்கத்தில் நின்றாலும் தர்மம் இருக்கக்கூடிய பாண்டவர்கள் வெல்ல வேண்டும் என்று நினைப்பதே நீதியும் அறமும் ஆகும்.

# யுத்தத்திற்காக பெற்ற கடன்களை தற்போதும் செலுத்தி வருகின்றோம்

(கொழும்பு)

அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படலாம். அது அடிப்படை சம்பள அதிகரிப்பாகவோ அல்லது கொடுப்பனவாகவோ அமையலாம் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தை நோக்கியதான வகையில் பல்வேறு தரப்புக்களுடன் ஜனாதிபதி தற்போது கலந்துரையாடல்களை நடத்திவருகின்றார். 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான நடுத்தர கால வரவு செலவுத்திட்டக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

**கேள்வி:**அடுத்த வரவு செலவுத் திட்டம் எப்போது?

**பதில்:**திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் வரவு செலவுத்திட்டத்தை நோக்கியதான வகையில் பல்வேறு தரப்புக்களுடன் ஜனாதிபதி தற்போது கலந்துரையாடல்களை நடத்திவருகின்றார். அதாவது இம்முறை பல்வேறு துறைசார்ந்த தரப்புக்களையும் ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்திவருகின்றார்.

**கேள்வி:**வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. எதிர்காலத்தில் அதனை குறைப்பதற்கு எண்ணம் உள்ளதா?

**பதில்:** அது தவறான புரிந்து கொள்ளல் ஆகும். அதாவது யுத்த காலத்தில் அரசாங்கம் ஆயுதங்களை குறுகிய கால நடுத்தரகால மற்றும் நீண்டகால கடன்கள் அடிப்படையிலேயே கொள்வனவு செய்தது. அந்தக் கடன்களை தற்போதுதான் செலுத்திவருகின்றோம். எனவே நிதித் தேவை உள்ளது.

**கேள்வி:** வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உள்ளதா?

**பதில்:** இருக்கலாம். கடந்த காலம் முழுவதும் அதிகரித்து வந்துள்ளோம்.

**கேள்வி:** சம்பளம் அதிகரிக்கப்படுமா? அல்லது கொடுப்பனவு அதிகரிக்கப்படுமா?

**பதில்:** ஏதாவது ஒன்று செய்யப்படலாம். அரச ஊழியர்களின் கைகளுக்கு பணம் கிடைக்கும். ஆனால் அரச ஊழியர்களின் குறைந்த மட்ட சம்பளத்தை 7ஆயிரத்து 100 ரூபாவிலிருந்து 13ஆயிரத்து 400 வரை எமது அரசாங்கமே அதிகரித்தது.

**கேள்வி:**ஊவா தேர்தலில் அரசாங்கத்துக்கு பாதகமான நிலைப்பாடு உள்ளதா?

**பதில்:**ஊவா தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற உறுதியான நம்பிக்கை எம்மிடம் உள்ளது. அதற்கு தேவையான வகையில் அபிவிருத்திகளை நாங்கள் செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# யாழ்.கொலைகளுக்கு பிரேசில் கத்தி!

(யாழ்ப்பாணம்)

பிரேசில் நாட்டில் தயாரிக்கப்பட்ட நீளமான கத்தி வகை ஒன்று யாழ்ப்பாணத்தில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அந்த கத்தி பிரதேசத்தில் நடக்கும் பல கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பீ.விமலசேன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக நடைபெற்ற கொலை மற்றும் காயம் ஏற்படுத்தும் சம்பவங்களில் இந்த கத்தி அதிகளவில் பயன்படுத்தப்பட்டிருப்பது கைது செய்யப்பட்ட நபர்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த கத்திகளை யாழ்ப்பாணத்தில் கொள்வன்வு செய்ததாக சந்தேக நபர்கள கூறியுள்ளனர்.

பிரேசில் நாட்டில் இந்த கத்திகள் தயாரிக்கப்படுவதுடன், அவற்றை இலங்கைக்கு கொண்டு வந்து யாழ்ப்பாணத்திற்கு விநியோகிப்பவர் பற்றி தகவல் கிடைக்கவில்லை.

இது சம்பந்தமாக நடத்தும் விசாரணைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**09.08.2014 இற்கான வினா**
வெற்றி அடைவதற்கான இரகசியம் யாது?
**08.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**
**கோவில் என்பதன் பொருள் யாது?**

- கோ+ இல் – இறைவன் உறையும் இடம்
- கடவுள் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடம்
- பூமிக்கு அடியில் எங்கும் நீர் வியாபித்து இருப்பினும் ஒரு இடத்தில்தான் கிணறு வெட்டி அந்த நீரைப் பயன்படுத்துகின்றோம். அதேபோன்று இறைவனும் எங்கும் வியாபித்து இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கோவில் அமைத்து இறைவனை உருவ வடிவில் வழிபடுவது இந்துக்கள் மரபு

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களுடைய கோஷங்களின்மீது கவனம் செலுத்துங்கள். முதலில் வருவது அன்னமயகோஷா. நல்ல உணவைத் தேர்ந்தெடுத்து சரியான நேரத்தில் உணவருத்துங்கள், அந்த உணவை உட்கொள்ளும் சமயம் அதனை அனுபவித்து உண்ணுங்கள், உணவு அருந்தும் சமயம், தேவையற்ற வேறு எண்ணங்களுக்கு இடம் கொடுக்கலாகாது. நீங்கள் தேக ஆரோக்கியத்துடனும் திடகாத்திரத்திடனும் திகழவேண்டும். நாம் மேல்நாட்டவரைப்பார்த்தால் நம் உருவம் எவ்வளவு சிறிது என்பது புரியும். நன்கு நிமிர்ந்து நடந்து செல்லுங்கள். பலர் உடல் நடக்கும் சமயம் கூனி இருப்பதைக் காண்கின்றோம்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனதில் உறுதி வேண்டும்



- பிறருக்காகச் செய்யும் சிறுமுயற்சி கூட, நமக்குள் இருக்கும் சக்தியை எழுப்பி விடும். பிறருக்காக சிறு நன்மையை மனதில் நினைத்தாலும், சிங்கத்தின் பலம் நமக்கு உண்டாகும்.
- செல்வமும், புகழ்வாழ்வும், உலக போகமும் சில நாள்களுக்கே. எனவே ஆசையில் மூழ்கிக் கிடக்க வேண்டாம். கடமையைச் செய்து களத்தில் உயிரை விடுவது தான் நன்மை.
- ஒருவரிடமும் பொறாமைப்படக் கூடாது. நன்மை செய்ய விரும்புவோருக்கு கை கொடுக்கத் தயாராகுங்கள். உலக உயிர்களை நேசித்து சகோதர உணர்வுடன் வாழுங்கள்.
- ஏழைகள், பலமற்றவர்கள், நோயுற்றவர்கள் ஆகியோரிடம் சிவனைக் காண்பவனே உண்மையில் கடவுளை வழிபடும் பேறு பெற்றவன். கோயிலில் சிவனைக் கண்டு வணங்குபவனை விட, சேவை செய்பவனையே சிவன் நேசிக்கிறார்.
- உள்ளத்தில் உறுதி, பேச்சில் இனிமை, இதழில் புன்னகையோடு எப்போதும் இருங்கள். மனத்தளர்வு தரும் விஷயங்களில் மனதைச் செலுத்துவது கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவற்கட்டு மகாத்மா வி.கழகத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் இடம்பெறும் இப் போட்டிகள் அணிக்கு 5 பேர் கொண்டவையாக சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ் மாவட்ட மட்டத்தில் இடம் பெற்ற இப் போட்டிகளில் முன்னணி 32 அணிகள் பங்குகொள்கின்றன.

போட்டிகள் 15 நிமிடங்களைக் கொண்ட இரு பாதிகளைக் கொண்டது.

தெரிவாகிய அணிகள் கத்தரிக் கோல் முறையில் போட்டியிட்டு இறுதிப் போட்டி இடம்பெறவுள்ளது.

இதன்படி தாவடி காளியம்பாள் வி.க, நாவாந்துறை சென் நீக்கிலஸ் வி.க, நாவாந்துறை சென் மேரிஸ் வி.க, ஊரெழு றோயல் வி.க ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளன.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டிகளின் விபரங்கள் வருமாறு:

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 2 கோல்களைப் போட்ட போதும் பதிலுக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் ஒரு கோலையே போட்டது. இதனால் இப் போட்டியில் 2:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பம் முதலே கோல்களைப் போட்டு அசத்தியது.

அடுத்தடுத்து 4 கோல்களை நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் போட்ட போதும் பதிலுக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியால் 2 கோல்களையே பெறமுடிந்தது.

இதனால் இப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-23)

# மகாஜனாவை வீழ்த்தியது யாழ்.மத்திய கல்லூரி



இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பிரிவு 3 இற்கான மூன்றாம் சுற்றுத் தொடர் ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி 99 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 48 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோமோதரன் 69 ஓட்டங்களையும் ஐரேகன் 65 ஓட்டங்களையும் திரேசன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் பிரகாஸ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் டினுசன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

212 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 32 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சரண்ராஜ் 31 ஓட்டங்களையும் டினோஷன் 27 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் தினுஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் திரேசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் அலன்ராஜ் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (க)

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கமொன்றிற்கு 2 கோடி பரிசு

Asian Games INCHEON 2014

ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்லும் அரியானா மாநில வீரர், வீராங்கனைகளுக்கு தலா 2 கோடி ரூபா பரிசளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தங்கம் வென்றால் 25 இலட்சம் ரூபா என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், முதலமைச்சர் பூபிந்தர் சிங் ஹூடா அறிவித்துள்ள புதிய ரொக்கப்பரிசு விபரங்களின்படி ஆசிய கோப்பையில் தங்கம் வென்றால் 2 கோடி ரூபாவும் வெள்ளி பதக்கத்தை பெற்றால் ஒரு கோடி ரூபாவும், வெண்கலம் வென்றால் 50 இலட்சம் ரூபாவும் பரிசளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துப்பாக்கி சுடுதல் வீராங்கனை அனிசா சயீத், அரியானா மாநில விளையாட்டுத் துறையின் துணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# திக்கம் இளைஞர் வெற்றி


தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு:

திக்கம் இளைஞர் கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒருகோலைப் பெற்றமனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க)

# ரோஜர்ஸ் கோப்பை டெனிஸின் 3 ஆவது சுற்றில் ஷரபோவா



ரோஜர்ஸ் கோப்பை டெனிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் ஸ்பெயினின் கார்பைன் முகுருசாவுடன் நேற்று மோதிய ஷரபோவா 4:6 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார்.

பின்னர் சுதாரித்துக் கொண்டு அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 4:6, 6:4, 6:1 என்ற செட் கணக்கில் வென்று 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 2 ஆவது சுற்றில், நம்பர் 1 வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6:0, 6:2 என்ற நேர் செட்களில் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோர்சரை எளிதில் வென்றார்.

டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 6:1, 6:2 என்ற நேர் செட்களில் செக் குடியரசின் கிளாராவை வீழ்த்தினார். முன்னணி வீராங்கனைகள் லூசி சபரோவா (செக்.), வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), ஏஞ்சலிக் கெர்பர் (ஜெர்மனி), ஹீதர் வாட்சன் (இங்கிலாந்து) ஆகியோரும் 3 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். (க)

# இந்தியாவின் பெட்டிங் செம காமெடி



மான்செஸ்டர் டெஸ்டில் இந்திய அணி பேட்டிங் மிகவும் மோசமாக இருந்தது. 8 ரன்னுக்கு 4 விக்கெட்டை இழந்து திணறிய இந் தியா 152 ரன்னுக்கு ஓல் அவுட் ஆனது.


6 வீரர்கள் 'டக்' அவுட் ஆனார்கள். இந்திய வீரர்கள் மோசமான ஆட்டத்தை முன்னாள் வீரர்கள் சாடினர். இந்திய அணியின் முன்னாள் வீரர் பரூக் என்ஜினீயர் கூறியதாவது.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் முதலில் பேட்டிங் செய்தது தவறான முடிவு. இந்த ஆடுகளத்தில் முதலில் பேட்டிங் செய்ய யாரும் விரும்பமாட்டார்கள். இந்திய வீரர்கள் பெட்டிங் நகைச்சுவையாக தான் இருந்தது. குறிப்பாக முதல் 4 வீரர்கள் ஆட்டம் மிகவும் மோசம் என்றார்.

இந்திய அணி முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் கூறுகையில்,

இந்திய வீரர்கள் தங்களது விக்கெட்டை பறிகொடுத்த விதத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது. டோனி 71 ஓட்டங்கள் எடுத்தாலும் அவரது கேட்ச் வாய்ப்பை தவறவிட்டனர். தவறான ஷொட்டுகளை தேர்வு செய்து விளையாடினர் என்றார். (க)

# ஆயிரம் ஓட்டங்களை கடந்த டோனி



மான்செஸ்டர் டெஸ்டில் இந்திய அணி கப்டன் டோனி 71 ஓட்டங்களை பெற்று இங்கிலாந்துக்கு எதிராக ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

இங்கிலாந்துக்கு எதிராக ஆயிரம் ரன்னை கடந்த 11 ஆவது இந்திய வீரர் இவர் ஆவார். 8 ஆவது விக்கெட் கீப்பர் ஆவார்.

மேலும் இங்கிலாந்து மண்ணில் இது டோனியின் 7வது அரைசதம். இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் சதம் ஏதும் அடிக்காமல் அதிகமுறை அரைசதம் அடித்த வீரர்களின் வரிசையில் மேற்கிந்திய வீரர் ஷெர்வின் கேம்பலுடன் 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். அத்துடன் இங்கிலாந்து மண்ணில் 7 அரை சதம் அடித்த தென் ஆபிரிக்க விக்கெட் கீப்பர் ஜான் வெஸ்ட்சியின் சாதனையை சமன் செய்தார்.

இந்திய அணி ஒரு பக்கம் நிலைகுலைந்து போனாலும் அணித்தலைவர் டோனி தனிப்பட்ட முறையில் சில சாதனைகளை வசப்படுத்தியிருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதம் விளாசிய சங்கக்கார ஆதிக்கம் செலுத்தும் இலங்கை



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டி காலியில் நடந்து வருகிறது.

முதல் இன்னிங்ஸில் விளையாடிய பாகிஸ்தான் அபாரமாக 451 ஓட்டங்கள் குவித்தது. இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து நேற்றைய 3-வது நாள் ஆட்டத்தில் விளையாடிய இலங்கை பொறுமையான ஆட்டத்தால் 2 விக் கெட்டுகள் மட்டும் இழந்து 252 ஓட்டங்கள் குவித்துள்ளது. சில்வா 62 ஓட்டங்களில் வெளியேறினார்.

தொடக்கத்தில் இருந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சங்கக்கார தனது 37 ஆவது சர்வதேச டெஸ்ட் சதத்தை பெற்றுக் கொண்டார். இவர் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்கிறார்.

அதேபோல் ஜெயவர்த்தன அரை சதம் விளாசினார். இவர் 55 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். பாகிஸ்தான்தரப்பில் ஜுனைட், தல்காதலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். நேற்றைய ஆட்டம் மழையால் குறைவான நேரமும் நடைபெற்றது. (க)

# இந்தியாவை பாதுகாக்கும் வருணபகவான்



வருணபகவான் குறுக்கிட்டதால் இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4-வது டெஸ்ட் போட்டியின் நேற்றைய 2-ம் நாள் ஆட்டம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இங்கிலாந்து பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 152 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக தோனி 71 ரன்கள் எடுத்தார். அஷ்வின் 40 ரன்கள் சேர்த்தார்.

இதையடுத்து முதல் இன்னிங்சைத் தொடங்கிய இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 113 ரன்கள் எடுத்திருந்தது. நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தின் உணவு இடைவேளை வரை மேலும் 3 விக்கெட்டுகளை இழந்து 200 ரன்னை கடந்தது.

அணியின் ஸ்கோர் 237 ஆக இருந்தபோது பலத்த மழை பெய்தது. இதனால் ஆடுகளம் பாதிக்கப்படாமல் இருக்க பிளாஸ்டிக் தார் பாய்கள் போட்டு மூடப்பட்டன. எனினும் மற்றைய பகுதிகளில் தண்ணீர் தேங்கியதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. மழை விட்டபின்னர் தண்ணீரை வெளியேற்றும் முயற்சிகள் நடைபெற்றன. ஆனாலும் மைதானம் ஈரப்பதமாக இருந்ததால் ஆட்டம் தொடர முடியாமல் போனது.

இந்திய அணியை விட இங்கிலாந்து தனது முதல் இனிங்சில் 4 விக்கெட் கைவசம் உள்ள நிலையில் 85 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. (க)

# பாதுகாப்பு நிலையங்களில் மாறுபட்ட கட்டண அறவீடு

## மாநகர சபை நடவடிக்கை

நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் அறவிடுவதற்கு நேறறு முதல் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் தெரிவித்தார்.

நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும் துவிச்சக்கரவண்டிகளுக்கு 10 ரூபாவும் என அதிகூடிய கட்டணம் அறிவிடப்பட்டு வருவது தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

மேற்படி கூடிய கட்டணங்கள் அறவிடுவதற்கு மாநகர சபை அனுமதி வழங்காது. மாநகர சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண அளவிற்கேற்ப துவிச்சக்கரவண்டிகளுக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் அறவிடமுடியும். மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்களுக்கு விரும்பினால் அதிகூடிய தொகையாக 5 ரூபா அறவிடமுடியும்.

அதனை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். அத்துடன் வாகனப் பாதுகாப்பு நிலையங்களின் கட்டணங்கள் தொடர்பில் ஒவ் வொரு வாகனப் பாதுகாப்பு நிலையங்களின் வாயில்களிலும் மாநகர சபையினால் மேற்படி கட்டண விபரங்கள் தொங்க விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மேலும் இந்த நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு வாகனப் பாதுகாப்பு நிலையங்களிலும் தலா ஒவ்வொரு பொலிஸார் கடமையில்ஈடுபடவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (எ-11)

## ஜனாதிபதி...

லப்பட்டதன் பின்னர், தமது பிள்ளைகள் வீடு திரும்பாமல் காணாமல் போயிருப்பதாக சிலர் கூறினர்.

தமது வீடுகளுக்கு வந்து கடத்திச் செல்லப்பட்ட அல்லது பிடித்துச் செல்லப்பட்ட பிள்ளைகளைக் காணவில்லை என்றும் மற்றும் சிலர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் ஜனாதிபதியினால் நீடிக்கப்பட்டிருக்கின்றது.

தமது விசாரணைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பதனால், இந்த ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம் என்று அச்சம் கொண்டிருந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்று ஆணைக்குழுவின் செயலாளர் குணதாஸ சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)

## வெளிநாட்டு...

செயற்றிட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

இதன் அடிப்படையில் இந்த ஆண்டு முதற்கட்டமாக சுமார் 23 பேர் கொண்ட வெளிநாட்டு இராணுவ உயரதிகாரிகள், இலங்கையில் மேலதிக இராணுவ பயிற்சிக்காக வருகை தரவுள்ளனர்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், சீனா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், மலேசியா, பாகிஸ்தான், உகண்டா, செனகல், சூடான், சிங்கப்பூர், இந்தோனேசியா, ஓமான், வியட்நாம், துருக்கி போன்ற 16 நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளே முதற்கட்டப் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இன்னும் பல நாடுகளிலிருந்து இராணுவப் பயிற்சி தொடர்பான வேண்டுகோள்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது. (எ-11)

## மேர்வினை...

மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தொடர்கையில்,

நல்லூர் ஆலய உற்சவத்தில் ஆலய வளாகத்திலும் காலணிகளுடன் செல்லக்கூடாது என்ற நடைமுறை இருக்கின்றது. சப்பாத்துக்களுடன் மேர்வின் சில்வாவினைக் கண்டதும், ஓடிச் சென்று இது தொடர்பில் அவருக்கு விளக்கினேன். அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

ஆனால், இவ்விடயத்தினைப் பெரிதுபடுத்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருந்தும் ஊடகங்கள் ஒன்றினை மட்டும் கவனிக்கவில்லை.

நல்லூர் ஆலயத்திற்கு கலாசார உடையணிந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் குட்டைப் பாவாடைகளுடன் பெண்கள் செல்கின்றனர். இதனை நான் அவதானித்துள்ளேன்.

மேர்வின் சப்பாத்துப் போட்டுச் செல்வதினை அவதானித்த ஊடகங்கள் குட்டைப் பாவாடை அணிந்து செல்வதையும் அவதானிக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (எ-11)

## கொள்கை...

கொள்கை என்ன?

அமெரிக்காவின் கைப்பாவையாக கொள்கை இல்லாத ஐ.நா அமைப்பின் செயற்பாடுகள் குறித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தெளிவுபடுத்தலை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் தூதரக இருக்கும் மிச்சேல் ஜே. சீசன் தூதுவர் பதவியில் இருந்து ஐ.நா பாதுகாப்புச் சபையின் பிரதித்தூதுவராக பதவியேற்க உள்ளார்.

இலங்கையை போர்க்குற்ற பொறியில் சிக்கவைப்பதே அவரது ஒரே நோக்கம். அவரது இந்த நியமனம் இலங்கைக்கு சாதகமானது அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி நந்திக்கடல் களப்பில் கொல்லப்பட்டதும் 23 ஆம் திகதி ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு வந்தார்.

காஸாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படும் போது அவர் அறிக்கையை மாத்திரமே வெளியிட்டார்.

அமெரிக்கா இஸ்ரேலின் போர் தாக்குதல்களை நியாயப்படுத்தும் போது உலகம் முழுவதும் சமாதானத்தை விரும்பும் மக்கள் பாலஸ்தீனத்தில் மேற்கொள்ளப்படும் மனித கொலைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

இஸ்ரேல் மேற்கொள்ளும் இந்த குற்றங்களையும் அநீதியையும் நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இலங்கை பாலஸ்தீன மக்களுக்கு என்றும் ஆதரவை வழங்கி வரும் நாடு.

எனினும் இஸ்ரேல் என்ற நாட்டை உலக வரைபடத்தில் இருந்து அழிக்கும் முஸ்லிம் அடிப்படைவாதிகள், பழைமைவாதிகள், பயங்கரவாதிகள் மற்றும் போராளிகளின் செயல்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை எனவும் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கூறியுள்ளார். (எ-11)

# ஆலய திருட்டுக்களுடன் தொடர்புடைய இருவர் கைது



யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் பலவற்றில் இடம்பெற்ற பல்வேறு பெறுமதியான பொருட்கள், வாகனங்கள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் யாழ்ப்பாணத்தின் விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பல லட்சம் ரூபா பெறுமதியான விலைமதிப்பற்ற பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேனா ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்தாவின் அனுசரணையுடன் சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி மற்றும் உதவி பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் தெல்லிப்பழையைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம், சுன்னாகம், ஊர்காவற்றுறை வட்டுக்கோட்டை, மானிப்பாய் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் பகுதிகளில் உள்ள ஆலயங்கள் பலவற்றிலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பது தெரியவந்தது. இந்த நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பு சென்ற பொலிஸார் குறிப்பிட்ட பொருள்களை மீட்டதுடன் மற்றொரு சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே.பிக்கு எதிரான...

உட்படுத்தவும், பல்நோக்கு கண்காணிப்பு விசாரணை முகமை என்ற அமைப்பு சி.பி.ஐ. அதிகாரிகளை கொண்டு அமைக்கபபட்டது.

இந்த விசாரணை முகமை, ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒரு முறை, சென்னையில உள்ள தடா நீதிமன்றில் தங்களது விசாரணை தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்து வருகிறது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த முன்னாள் நிர்வாகி, குமரன் பத்மநாதன் என்ற கேபி என்பவரை சி.பி.ஐ. தேடிவந்தது.

கடந்த 2009ம் ஆண்டு மலேசியாவில் தலைமறைவாக இருந்த குமரன் பத்மநாதனை இலங்கை இராணுவம் கைது செய்தது.

பின்னர், அவருக்கு பொது மன்னிப்பு வழுங கப்பட்டது.

தற் போது, இலங்கையில் அவர் வசித்து வருகிறார். எனவே, அவரை கைது செய்து, இந்தியாவுக்கு கொண்டு வந்து விசாரிக்க வேண்டும். இவ்வாறு அதில கூறியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல், நீதிபதி எம்.சத்திய நாராயணன் ஆகியோர் முன்பு வசாரிக்கப்பட்டது. அப்போது, சிபிஐ. தரப்பில் தாக்கல் செய்த பதில் மனுவில் ராஜிவ் காந்தி கொலை வழகை விசாரித்த முன்னாள் அதிகாரிகள், இந்த கொலைவழக்குகுறித்து ஊடகங்களுக்கு தங்களது விருப்பம் போல் பேட்டிகளை கொடுக்கின்றனர்.

இவற்றின் அடிப்படையில் மனு தாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியிருந்தது.

இந்த வழக்கை நேற்று வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல. இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம் என்று உத்தர விட்டனர். (எ-11)

## விமலின்...

வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்தவே அரசாங்கம் இணங்கியுள்ளது என கெஹலிய தெரிவித்துள்ளார்.

## வடக்கு மாகாண சபைக்கு போதிய நிதி இல்லை

### முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் வளர்ச்சிப் பணிகளுக்குப் போதிய நிதியை அரசாங்கம இன்னும் முழுமையாக வழங்காதுள்ள படியால்சபை நடவடிக்கைகளை முன்னெடுப பதில் பெரும் பிரச்சினைகள் உள்ளதாக முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவக்கும் செய்தியாளர சந்திப்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-6)

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட விசேட நிதியிலிருந்து 22 மிலியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கபட்டுள்ள வவுனியா வைத்தியசாலை மருத்துவ நிபுணர்களுக்கான விடுதி கட்டடத்தை அவர் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

அத்துடன் மிகவும் பின்தங்கிய பிரதேசமான ஓமந்தை பாமோட்டை நவ்வி பகுதியிலும், முல்லைத்தீவு மாவட்டம குமுழமுனை பகுதி யிலும் இரண்டு கிராமிய வைத்திய சாலைகளை அமைப்பதற்கான அடிக்கற்களையும் அவர் நாட்டி வைத்தார்.

வடமாகாண சபைக்கு பெருந்தொகையான நிதி ஒதுக்கப்படுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும், கூறப்படுகின்ற நிதியில் சிறிய தொகையையே எங்களுக்கு வழங்குகினறது. மிகுதி நிதியை அவர்கள் செலவு செய்கின்றார்கள் என்றார் முதலமைச்சர்.

அதனை எதற்கு, எப்படி செலவு செய்கின்றார்கள் என்பது தெரியவில்லை. இந்த நடவடிக்கை அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

இனிமேலாவது மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடன இணைந்து அரசாங்கம் மக்களுக்காகச் செயற்பட முன்வர வேண்டும் என்றும் கூறினார் முதலமச்சர்.

இந்த வைபவங்களில் வடமாகாண சுகாதாரத்துறைஅமைச்சின் செயலாளர் ரவீந்தரன், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா வைத்திய சாலை பணிப்பாளர் மற்றும் வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், மாகாண சபை உறுப்பினர்கள என பலரும் கலந்து கொண்டனர்.

நிதிப்பற்றாக்குறை, ஆளணிபற்றாக்குறை, உட்கட்டு மாண வசதிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் பொதுமக்களுக்கான வைத்திய சேவைகள பலவற்றைத் தாங்கள் மேற் கொண்டு வருவதாக இந்தவைவத்தில் உரையாற்றிய மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர். சத்தியலிங்கம் தெரிவித்தார். (எ-11)


வேலைவாய்ப்பு

Optimo International நிறுவனத்திற்கு 20 பணியாளர்கள் உடனடி தேவை. O/L, A/L சித்தி மட்டுமே போதுமானது. பயிற்சியுடன் அனைவருக்கும் நிரந்தரமான பின்வரும் தொழில்வாய்ப்புக்கள் உண்டு.

Ass.Manager - 02 Distributor - 06
Supervicer - 06 Administrator - 02
Leader - 04 இறுதித் திகதி - 15.09.2014



தொடர்பு: -
0770771377, 0771908997
(7246)

வெளிவந்துவிட்டது!
தரம் 5 வெற்றித் தேர்வு
புலமைப் பரிசில் பரீட்சைக்கான முற்றிலும் எதிர்பார்க்கை அம்சங்களுடன்
வெற்றித் தேர்வு செயலமர்வுக் கையேடு
5 மாதிரி வினாப் பத்திரங்களும் விடைகளும் உள்ளடக்கிய
வெற்றித் தேர்வு - 4
அனைத்துப் புத்தக நிலையங்களிலும் இன்றே பெற்றுக் கொள்ளலாம்.
(C-8142)
தொடர்புகளுக்கு: 077 538 8471

Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-8138)
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

7வது தடவையாக மீண்டும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும்
மாதம் 75,000/- க்கு மேற்பட்ட வருமானத்துடன்
வெளிநாட்டு ஹொட்டேல் பயிற்சிநெறியும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கக்கூடிய வேலைவாய்ப்பு ஏற்பாடும்



செப்டெம்பரில் 6ஆவது அணி பயணமாகிறது.
வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து 7வது அணியில் இணைந்துகொள்ள வாருங்கள்!
15ம் திகதி வெள்ளி பி.ப. 2 மணி
யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்
16ம் திகதி சனி காலை 10மணி
வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்
18ம் திகதி வெள்ளி மு.ப. 10மணி
யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்
(C-8141)
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி நிறுவனம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 www.sikaram.lk fb: Edu Sikaram
முற்பதிவுக்கு : 077 36 16 798

சாரதி தேவை



சாரதி (Driver) வேலைக்கு அவசரமாக ஆட்கள் தேவை
கீழ்வரும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை ஓகஸ்ட் 20க்கு முதல் அனுப்பி வைக்கவும்
தொடர்புகளுக்கு:
021 222 8025
TCT Multi Trade Centre
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

உலகத் தமிழர்களின் உச்ச நிறுவனம்
ரமி இசைத்தட்டின் மாபெரும் மலிவு விற்பனை
ராஜா நகரில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசாமி கந்தனின் மஹா உற்சவ திருநாளை முன்னிட்டு சுவிசில் இருந்து மூன்று இடங்களில் முகாமிட்டு நடத்தி வருகிறோம்.
இலங்கையில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் எதிர்பார்க்காத விலையில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். அனைத்தும் ஒரிஜினல் சிடிக்கள். கம்யூட்டர் பதிவுகள் அல்ல என்பதை மக்கள் அறிய வேண்டும்.
Contact: KANTHAN 0779704753
(7220)
கொடியேற்றத்திலிருந்து 01.08.2014 மலிவு விற்பனை ஆரம்பம் இதனை தொடர்ந்து துர்க்கை அம்மன் (சப்பறம், தேர், தீர்த்தம்), சன்னதி முருகன் (மே நாளிலிருந்து தீர்த்தம் வரை), வல்லிபுரம் ஆள்வார் (சப்பறம், தேர், தீர்த்தம்) உற்சவ நாட்களிலும் எமது மலிவு விற்பனை.



BAR DIGITAL AUDIO
ரமி AUDIO CD
பார் MP3
ஐங்கரன் DVD
அனைத்தும் ஒரிஜினல்
30 ரூபாயிலிருந்து விலை ஆரம்பம்
விற்பனை நடைபெறும் இடம்: கோவில் வீதி, 231 நல்லூர் யாழ்அருவி (சுவிஸ் மினரல் வாட்டர் கம்பெனி)
விற்பனை நடைபெறும் இடம்: லிங்கம், ரியோ கூல்பார் (நடுவே அமைந்துள்ளது)
RAMIY RECORDS SWISS MADE

SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT
உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.
தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்
021 492 6003



இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்
SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org